பக்கங்கள்: 13

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 மார்கழி 07 சனிக்கிழமை 23.12.2023 கதிர் 407

# மயிலத்தமடு பண்ணையாளர்களின் போராட்டம் 100 நாள்கள் நிறைவு

## இதுவரை எந்தத் தீர்வும் இல்லை

மயிலத்தமடுபெரியமாதவனை கால்நடை வளர்ப்போர் கமநல அமைப்பினரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற தொடர் போராட்டம் நூறு நாட்களை எட்டியுள்ள நிலையில் இன்று காலை 9 மணிக்கு போராட்ட களத்தில் பெரும் கவனவீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப் படவுள்ளதாக அறிவிக்கப் பட்டுள்ளது.

கால்நடையாளர்களின் தொடர் போராட்டத்துக்குவலுச்சேர்க்கும் முகமாகஅனைவரும்பங்கேற்று ஆதரவும் நியாயமும் வழங்கு மாறு கோர வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்நிலையில், வடக்கு ☞ 2

## இனி இது ரகசியம் அல்ல!

பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டைதடுத்துநிறுத்திநிலைப்படுத்தி விட்டதாக ஆளும் தரப்பு என்னதான் சொன்னாலும், பன்னாட்டு நாணய நிதியத்தின் இரண்டாம் கட்ட நிதி விரைவில் விடுவிக்கப்படுவதன் மூலம் நாடு வங்குரோத்து நிலையில் இருந்து மீண்டுவிட்டதாக அறிவிக்கப்பட்டுவிடும் என்று தெரிவிக்கப்பட்டாலும் யதார்த்தம் என்னவோ அதற்கு மாறாகவே இருக்கின்றது.

நவம்பர் மாதத்தில் ஆடை உற்பத்தித் தொழிற்றுறையில் 12.68 சதவீதம் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. இது தொடர் வீழ்ச்சியின் ஓர் அங்கமே. செப்டம்பர் 2022 முதல், மேற்கத்திய சந்தைகளில் ஏற்பட்ட பொருளாதார மந்தநிலையின் காரணமாகவே இந்த வீழ்ச்சி ☞ 2

# இந்தியத் தூதர் ஜா பத்திரம் கையளிப்பு

இலங்கைக்கான இந்தியாவின் புதிய உயர்ஸ்தானிகராக நியமனம் பெற்றிருக்கும் சன்தோஷ் ஜா ஜனாதிபதியிடம் தனது நற்சான்றுப் பத்திரத்தை நேற்றையதினம் கையளித்தார்.

சன்தோஷ் ஜா இலங்கைக்கான உயர்ஸ்தானிகராக நியமனம் பெறுவதற்கு முன்னதாக 2020 ஜீலை மாதத்திலிருந்து 2023 டிசெம்பர் வரையில் பிரசல்ஸ் நாட்டுக்கான இந்தியத் தூதுவராகச் சேவையாற்றினார்.

இந்தியா - இலங்கை மற்றும் ☞ 2

# மலையகத்துக்கான அதிகாரப் பகிர்வு வேறு வடக்கு கிழக்குக்கான அதிகாரப் பகிர்வு வேறு

## மட்டக்களப்பு மலையகம் 200 நிகழ்வில் திலகர்

இலங்கை - இந்திய ஒப்பந்தம் என்றதும் 1987 ஜே. ஆர்.ராஜீவ் ஒப்பந்தம் குறித்து மாத்திரம் பேசுவோர் 1954, 1964, 1974 ஆம் ஆண்டுகளில் செய்யப்பட்ட இலங்கை- இந்திய பிரதமர்களுக்கு இடையிலான மூன்று ஒப்பந்தங்கள் குறித்து இலகுவாக மறந்து விடுகின்றனர். 1987 ஒப்பந்தம் இலங்கைத் தமிழர்களுக்கான அதிகாரப் பகிர்வுக்காகச் செய்யப்பட்டது.

அதற்கு முன்னதான மூன்றும் மக்களைப் பகிர்ந்துகொள்வதற்காகச் செய்யப்பட்டது. 1948இல் பறிக்கப்பட்ட குடியுரிமையைக் கூட மீளப்பெற்றுவிட்டோம். ஆனால் மேற்படி ஒப்பந்தங்களினால் பிரிக்கப்பட்ட எமது உறவுகளையும் அரசியல் அதிகாரங்களையும் பெற முடியாது உள்ளோம்.

எனவே மலையகத்துக்கான அதிகார பகிர்வு என்பது வடக்கு கிழக்கு அதிகார பகிர்வில் இருந்து மாறுபட்டது என்பதைப் புரிந்துகொள்ளவேண்டும் என மலையக அரசியல் அரங்கத்தின் தலைமை ஒருங்கிணைப்பாளரும் முன்னாள் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மயில்வாகனம் திலகராஜா தெரிவித்து உள்ளார்.

மட்டக்களப்பு மலையகம் 200 நிகழ்வானது, சந்திரோதயம் கலை இலக்கிய பெருமன்றத்தின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு பொது நூலகக் கேட்போர்கூடத்தில் இடம் பெற்றது.

இராஜாங்கஅமைச்சர் சிவனேசத்துரை சந்தரகாந்தன், நாடாளுமன்ற உறுப்பினர் கோவிந்தம் கருணாகரன், முன்னாள் மாகாண சபை உறுப்பினர் பூ.பிரசாந்தன் ☞ 2

# காலத்தை இழுத்தடிக்கிறார் ரணில்

## சிவஞானம் குற்றச்சாட்டு

வடக்கு,கிழக்கு பிரதிநிதிகளுடன் ஜனாதிபதி சந்திப்பைநடத்துவதானது காலத்தை இழுத்தடிப்பதற்கும், உலகத்தை ஏமாற்றுவதற்கும் பயன்படுத்தப்படும் ஒரு தந்திரோபாயம் என்று இலங்கை தமிழரசுக் கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வடக்கு, கிழக்கு பிரதிநிதிகளுடன் நடத்திய சந்திப்பு தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடனான சந்திப்பானது எந்தவொரு நிகழ்ச்சி நிரலையும் கொண்டதாக இல்லை. அது வெறுமனே காலத்தை இழுத்தடிப்பதை நோக்கமாகக்கொண்டது.

அதுமட்டுமன்றி வாக்குறுதிகளை வழங்கிய உலக நாடுகளை ஏமாற்றுவதற்காக முன்னெடுக்கப்படுகின்ற ஒரு ஜனாதிபதியின் செயற்பாடாகவேஉள்ளது. குறிப்பாக ஜனாதிபதி முன்னெடுக்கும் பேச்சுவார்த்தையானது வெறுமனே புகைப்படப்பிடிப்புக்கானது, ஊடகங்களின் செய்திப் பசிக்கு தீனி போடுவதாகவே உள்ளது.

ஆகவே தமிழ் மக்களின் அபிலாஷைகளை பூர்த்தி செய்வதை அவர் இதய சுத்தியுடன் முன்னெடுக்க விரும்புவாராகஇருந்தால்அதற்கு மூன்றாம்தரப்புமத்தியஸ்தம் அவசியமாகின்றது. விசேடமாக இந்தியா, அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் அதற்கான வகிபாகத்தினைக்கொள்ள முடியும் என்றார்.

# இடைநடுவிலே நிற்காத விவசாய திட்டம் தேவை

## அமைச்சின் செயலர் வலியுறுத்து

இதுவரை இருந்த விவசாய வேலைத் திட்டங்களைப்போன்று இடைநடுவில் நிறுத்தாது, விவசாய நவீனமயமாக்கல் வேலைத் திட்டத்தை நடைமுறைப் படுத்திபிரதிபலன்களைக் காண்பிக்கத் தேவையானவழிகாட்டுதல்களை வழங்குமாறு ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க உரிய அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

மேலும், இத்திட்டத்தை நடைமுறைப் படுத்தும்போது ஏற்படும் பிரச்சினைகளை துறைசார் நிறுவனங்களுடன் தொடர்பு ☞ 2

# கொரோனா கால இணையம் மூடல்

கொவிட் -19 தொற்று நோய் பரவல் காலத்தில் அறிவுறுத்தல்கள் வழங்குதல் மற்றும் நிதி சேகரிப்புக்காக பயன்படுத்தப்பட்ட இணையத்தளத்தை தொடர்ந்தும் பயன்படுத்தாமல் இருப்பதற்கு ஜனாதிபதி செயலகம் தீர்மானித்துள்ளது.

கொவிட் தொற்று நோய் பரவலை கட்டுப்படுத்தியதன் பின்னர் இணையத்தளம் மூலம் நிதியத்திற்கு கிடைத்த நிதி தொடர்பிலான அறிக்கையை முகப்புப் பக்கத்தில் பதிவிட்டு 28.10.2020 ஆம் திகதி முதல் இணையபக்கத்தின் செயற்பாடுகள் நிறுத்தப்பட்டது. இதுகுறித்த அறிவித்தல் மற்றும் நிதி தொடர்பிலான விடயங்கள் மாத்திரமே இணையத்தின் முகப்புப் பக்கத்தில் பிரசுரிக்கப்பட்டிருந்தது. ☞ 2

# ரணிலுக்கு முண்டு கொடுக்கும் தமிழ் அரசியல்வாதிகள்

## கஜேந்திரகுமார் சாட்டை

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தன்னால் இனப்பிரச்சினைக்கு தீர்வினை தற்போது வழங்க முடியாது என்று அறிவித்துள்ள நிலையில், தமிழ் பிரதிநிதிகள் மீண்டும் பேச்சுக்குச்செல்வதானது அவரது அரசியலுக்கு முண்டு கொடுப்பதாகவே அமையும் என்று தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு ஊடக அமையத்தில் நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில்கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ☞ 8

# இனி பெப்ரவரியில்தான் மின் கட்டணக் குறைப்பு

மின்கட்டணத்தை குறைப்பது தொடர்பான யோசனையை எதிர்வரும் ஜனவரி 15 ஆம்திகதிக்கு முன்னதாக வழங்குவதாக மின்சார சபை கூறியுள்ளதென இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக் குழு தெரிவித்துள்ளது.

இதுகுறித்து பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு ஊடகங்களுக்கு தெரிவித்துள்ள தாவது:

மின்கட்டணத்தை குறைப்பது தொடர்பான யோசனை கிடைக்கப் பெற்ற பின்னர் அது தொடர்பில் மக்களின் கருத்துக்கள் கேட்டறியப்படும். அதன்பிறகு மின் கட்டணத்தைகுறைப்பது தொடர்பான பரிந்துரை வழங்கப்படும். பெப்ரவரி மாதம் ☞ 2

# ரூ 12 கோடி பெறுமதியான தங்கத்தோடு பெண் கைது

12 கோடி ரூபா பெறுமதியானதங்கத்தை நாட்டுக்கு கொண்டுவந்த இந்தியபெண்ணொருவர் கட்டுநாயக்க சுங்க பிரிவினரால் கைது செய்யப்பட்டார் என்று அதன் பேச்சாளர் சீவலி அருங்கொட தெரிவித்துள்ளார்.

இது தொடக்ஷிபில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

துபாயில் இருந்து நாட்டுக்கு வருகைத் தந்துள்ள குறித்த பெண்ணிடம் 5.5 கிலோ கிராம் நிறையுடைய தங்கம் கைப்பற்றப்பட்டுள்ளது.

இடுப்பு பட்டி மற்றும் கைப்பையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் தங்கம் மீட்கப்பட்டுள்ளது. 35 வயதான பெண் ☞ 2

# 10 அமைச்சுக்களுக்கு புதிய செயலாளர்கள்

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பத்து அமைச்சுக்களுக்கான புதிய செயலாளர்கள் மற்றும் இரண்டு மாகாணங்களுக்கான பிரதம செயலாளர்களை நியமித்தார்.

இந்த நியமனங்கள் 2024 ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி முதல் அமுலுக்கு வரவுள்ளன.

கல்வி அமைச்சின் செயலாளராக திருமதி வசந்தா பெரேரா, நீதி, சிறைச்சாலை விவகாரம் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சின் செயலாளராக என். எம். ரணசிங்க, வனஜீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாது காப்பு அமைச்சின் செயலாளராக குணதாச சமரசிங்க ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சின் செயலாளராக ஏ. சி. ☞ 8

## இனி இது .....

என்று சொல்லப்படுகின்றது.

லண்டனுக்கான ஏற்றுமதிகள் மட்டுமே வளர்ச்சிப் போக்கில் இருக்கின்றன. அமெரிக்கா போன்ற முக்கிய சந்தைகளின் வருவாய் ஆண்டுக்கு 15.12 சதவீதம் சரிந்துள்ளது, அதே நேரத்தில் ஐரோப்பிய ஒன்றியத்தின் வருவாய் ஆண்டுக்கு 7.18 சதவீதம் சரிந்துள்ளது. 'பிற' சந்தைகளுக்கான ஏற்றுமதி ஆண்டுக்கு 32.87 சதவீதம் சரிந்துள்ளது.

ஆடை இலங்கையின் மிகப்பெரிய தொழில்துறை ஏற்றுமதி. இது 2022 இல் 5.95 பில்லியன் அமெரிக்க டொலர் வருமானத்தை ஈட்டியது. நாட்டின் ஆடைத் துறையில் சுமார் 300,000 பணியாளர்கள் உள்ளனர், அவர்களில் பெரும்பாலோர் பெண்கள்.

கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு ஆடை ஏற்றுமதி வருவாய் சுமார் ஒரு பில்லியன் டொலர் குறையும் என எதிர்பார்க்கிறது. ஆடை ஏற்றுமதி வருவாய் வருடத்தின் முதல் பதினோரு மாதங்களில் மொத்தம் 4.1 பில்லியன் அமெரிக்க டொலர்களாக இருந்தது, இது ஆண்டுக்கு ஆண்டு 19.58 சதவீதம் குறைந்துள்ளது.

ஆடைத் தொழிற்றுறை மட்டுமல்ல. மற்றொரு முக்கிய ஏற்றுமதித்துறையான தேயிலை உற்பத்தித்துறையிலும் பிரச்சினைதான். இங்கு விற்பனை மட்டுமல்ல உற்பத்தியே குறைந்துவிட்டது. இந்த ஆண்டில் தேயிலை உற்பத்தி 3.2 சதவீதம் வீழ்ச்சியடைந்துள்ளது. அதேபோன்று நவம்பர் மாதத்தில் பணவீக்கமும் 2.8 சதவீதத்தால் அதிகரித்துள்ளது.

இப்படி ஆளும் தரப்பு எதிர்ப்பதற்கு மாறாகவே கள யதார்த்தம் இருப்பது அடுத்த ஆண்டில் தேர்தலின்போது ரணிலுக்குக் கைகொடுக்கும் என்று எதிர்பார்க்க முடியாது.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## மயிலத்தமடு ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கிழக்கைச்சேர்ந்த அரசியல்வாதிகள், சிவில் தரப்பினர் மற்றும் மதத் தலைவர்கள் உள்ளிட்ட பலரும் இன்றைய போராட்டத்தில் பங்கேற்கவுள்ளனர்.

இந்த விவகாரத்தில் ஜனாதிபதி தலையிட்டும் இதுவரை எந்தத் தீர்வும் இல்லை.

## இனி ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இரண்டாம் வாரமளவில் மின்கட்டணத்தை குறைப் பது தொடர்பான யோசனைக்கு அனுமதி வழங்க திட்டமிடப்பட்டுள்ளது என்றுள்ளது.

இதேவேளை, இலங்கை மின்சார சபையின் செயற்பாடுகளை சுயாதீன நிறுவனத்தினூடாக கணக்காய்வு செய்யும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அதன் நிர்வாக சபையால் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. அத்தோடு குறித்த சுயாதீன கணக்காய்வு நடவடிக்கைகளை எதிர்வரும் ஏப்ரல் மாதமளவில் நிறைவு செய்ய திட்டமிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

## ரூ 12 கோடி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கண்டியில் வசிக்கும் நபரை திருமணம்செய்துள்ளதாக முதற்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது என்றார்,

## கொரோனா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இதனையும் முழுமையாக இடைநிறுத்த ஜனாதிபதி செயலகம் தீர்மானித்துள்ளது. தற்போது இந்த இணைய பக்கம் பயன்பாட்டில் இல்லை என்பதால் இணைய பக்கத்தின் பெயரை வேறு தரப்பினர் தவறான வழியில் பயன்படுத்துவதற்கான இயலுமை இருப்பதால் இந்த அறிவித்தலை ஜனாதிபதி செயலகம் வெளியிடுகிறது.

## மலையகத்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
உள்ளிட்ட அரசியல், கலை, இலக்கிய கல்விசார் ஆளுமைகள் பலரும் கலந்து கொண்ட இந்நிகழ்வின் தொடக்க உரையை மன்றத்தின் தலைவர் ச.மணிசேகரன் வழங்க தலைமையுரையை யூவன் ஆற்றினார். சிவம். பிரபாகரன், ஜீவன் ராஜேந்திரன் ஆகியோரின் சிறப்புரைகளும் இடம்பெற்றன.

இம்மாநாட்டில் பிரதான பேச்சாளராகக் கலந்து கொண்டு உரையாற்றியபோதே திலகராஜ் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:

மலையக சமூகத்தின் 200 வருட வாழ்வின் ஏற்ற இறக்கங்களையும் சோதனைகளையும் சாதனைகளையும் மதிப்பீடு செய்தவாறே மூன்றாவது நூற்றாண்டை நோக்கி நாங்கள் எவ்வாறு நகரப்போகிறோம் என்பதற்கான முனைப்பே மலையகம் 200 எண்ணக் கருவாகும். இன்று மலையகம் 200 ஐ பேசுவதற்கு மலையகம் 100இல் பல கருமங்கள் ஆற்றப்பட்டு உள்ளன. 200 ஆண்டுகளுக்கு முன்னர் 'மலையகம்' என்ற ஒரு சொல்லே இருந்திருக்கவில்லை.

இந்தச் சொல் உருவாக்கமானது ஒரு சமூக உருவாக்கத்தின் வெளிப்பாடு ஆகும். ஒரு புவியியல்சார் தோற்றப்பாடு இருந்தபோதும் இன்று மலையகம் என்றவுடன் ஒரு மக்கள் தொகுதியினரின் இன அடையாளம் உலகின் முன் விரிகிறது. இதனைப் புரிந்துகொள்ள முடியாத அல்லது சகித்துக் கொள்ள முடியாத சிலர் 'இந்திய வம்சாவளி 200' என்கிறார்கள்.

அப்படி ஒரு வம்சாவளி இலங்கைக்கு வந்து 2000 ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டது. இத்தனைக் காலமாக அதனை மறந்திருந்த பலருக்கு அதில் 200 ஆண்டுகளை மட்டுமே ஏன் கொண்டாட நினைவு வந்தது என்பது விந்தையாக உள்ளது. இன்னும் சிலர் தங்களை இன்னும் அடையாளம் காணவே இல்லை. அதனால் 'நாம்' 200 என்கிறார்கள். அந்த நாம் நாமம் அவர்களுக்கு மட்டுந்தான். அது அந்த நாளோடு முடிந்து போனது.

மலையகம் 200 க்கு பின்னால் ஒரு தாற்பரியம் இருக்கிறது. 200 ஆண்டுகளுக்கு முன்னர் பூச்சியத்தில் வாழ்வைத் தொடங்கி முதல் நூறு ஆண்டு காலம் முற்று முழுதாக அடிமை வாழ்வை வாழ நேர்ந்த ஒரு சமூகம் அடுத்த ஒரு நூற்றாண்டில் அரசியல், தொழிற்சங்க, கலை, இலக்கிய பண்பாட்டுத் தனித்துவங்கள் கொண்ட ஒரு தேசிய இனமாகத் தன்னைகட்டமைத்துக்கொண்டுள்ள வரலாறு இந்த மலையகம் 200 க்குள் இருக்கிறது.

இரண்டாவது நூற்றாண்டில் முதல் இருபது வருட கால அரசியல் எழுச்சியின் ஊடாக இலங்கைக்குடியுரிமையைப்பெற்ற சமூகம் சுதேச அரசினாலேயே குடியுரிமையைபறித்தபேரிடருக்குள் விழுந்தது. அதற்கு சக தமிழ் சமூகமும் துணைபோன சோக வரலாறு உள்ளது.

இலங்கையைப் பிரித்து தனிநாடு கோரிய இலங்கைத் தமிழர்களின் குடியுரிமை பறிக்கத் துணியாத இலங்கை சுதேச அரசு இலங்கைக்கு பொருளாதார பங்களிப்பை வழங்கிய மலையகத் தமிழ் மக்களின் குடியுரிமையைப் பறித்தது கொடுமையானது. அதற்கு காரணம் அவர்கள் கொண்டிருந்த 'இந்திய' அடையாளமே.

இந்திய சுதந்திர போராட்ட நிலையில் அந்நியர்கள் என்போர் பிரித்தானியர் மட்டுமேயாகும். ஆனால் இலங்கை சுதந்திர போராட்ட மனநிலை பிரித்தானியர்கள், இந்தியர்கள் இருதரப்புமே 'அந்நியர்' என்பதாகும். இந்த மனநிலையே இந்தியர்களாகக் கருதப்பட்ட மலையகத்தமிழர்களின் குடியுரிமைப்பறிப்புக்குகாரணமாகும். இந்த மனநிலை குடியுரிமையை பறித்ததோடு நின்றுவிடவில்லை.

இலங்கை - இந்திய ஒப்பந்தம் மூலம் அடுத்து வந்த மூன்று தசாப்த காலமாக இந்த மக்கள் இலங்கையில் இருந்து நாடு கடத்தப்பட்டார்கள். இதற்காக 1954, 1964, 1974 ஆம் ஆண்டுகளில் செய்யப்பட்ட இலங்கை- இந்திய பிரதமர்களுக்குஇடையிலானமூன்று ஒப்பந்தங்கள் குறித்து இலகுவாக மறந்து விடுகின்றனர். 1948 இல் பறிக்கப்பட்ட குடியுரிமையைக் கூட மீளப்பெற்றுவிட்டோம். ஆனால் மேற்படி ஒப்பந்தங்களினால் பிரிக்கப்பட்ட எமது உறவுகளையும் அரசியல் அதிகாரங்களையும் பெற முடியாது உள்ளோம்.

1984 ஆம் ஆண்டு ராமானுஜம் கப்பல் நிறுத்தப்படும்வரை இந்திய அடையாளம் கொண்ட மலையகத் தமிழர்களை இலங்கையில் இருந்து நாடு கடத்தும் அவலம் கொத்து கொத்தாக நடந்தேறியது. மனிதர்களை மனிதர்களாக அன்றி பண்டங்களைப் போன்று பரிமாறிக் கொண்ட கொடுமையை இரண்டு அரசுகள் அரங்கேற்றின.

1984 ஆம் ஆண்டுகளில் ஊக்கம் பெற்ற உள்நாட்டுப் போர் இந்தியாவுக்கு பயிற்சிக்காகச் செல்லும் இளைஞர்களை மறைமுகமாக ராமானுஜம் காவிச் சென்றதால் அந்தக் கப்பல் நிறுத்தப்பட்டதோடு இந்த நாடு கடத்தல் நிறைவுக்கு வந்தது. மறுபுறமாக 1948 இல் குடியுரிமைப் பறிப்புக்கு துணைபோன தமிழர் தரப்பு அதற்கு பிராய்ச்சித்தமாக 1986 ஆம் ஆண்டு திம்பு கோட்பாட்டின் ஓர் அம்சமாக 'குடியுரிமை அற்ற தமிழர்களுக்கு' அதனை வழங்க வேண்டும்என்றஒருகோரிக்கையை முன்வைக்க மீளவும் குடியுரிமை வழங்கும் நடைமுறை காலத்துக்கு காலம் சட்டம் இயற்றப்பட்டு 2009 வரை வழங்கப்பட்டன.

இதில் ஆச்சரியம் என்னவென்றால் ஒரு சட்டத்தைக்கொண்டு 1948 ஆம் ஆண்டு குடியுரிமையை பறித்தவர்கள் ஒன்பது (9) சட்டங்கள் ஊடாக 2009 வரை பகுதி பகுதியாக பல்வேறு பெயர்களில் அதனை மீளவும் வழங்கினார்கள். இந்த நாடே இவர்களை நாடற்றவர்கள் என்றும் இந்திய வம்சாவளி என்றும் சட்டத்தில் குறித்தது. ஆனால் கால இடைவெளியில் தங்களது அரசியல், தொழிற்சங்க, கலை, இலக்கிய, பண்பாட்டு செயற்பாடுகளால் தங்களை 'மலையகத் தமிழர்கள்' எனும் தேசிய இனமாக வளர்த்துக் கொண்டுள்ளார்கள்.

இப்போது அவர்களுக்கு கிடைக்கப்பெற்றுள்ள 'இலங்கைக் குடியுரிமையை' கேள்விக்கு உட்படுத்துகின்றார்கள். அர்த்தம் உள்ள குடியுரிமையை கோரி நிற்கிறார்கள். இந்த அர்த்தமுள்ள குடியுரிமைக் கோரிக்கையை வலியுறுத்தியே மலையகம் 200 எண்ணக்கரு முன்வைக்கப்படுகிறது. தமக்கான காணி, வீடு, முகவரி, கல்வி, சுகாதாரம், பாதை, போக்குவரத்து, என அரசினால் மறுக்கப்பட்டு வரும் பல உரிமைகளை வென்றெடுக்கும் பாரிய பொறுப்பு மலையக இளைய தலைமுறையினர் வசம் உள்ளது, மலையகம் 100 இல் நடேசய்யர் மீனாட்சியம்மை தம்பதியர் ஆற்றிய அரசியல் பணிகள் காரணமாகவே இன்று மலையகம் 200 இல் பேசுவதற்கு அரசியல் இருக்கிறது. அதே வகிபாகத்தை இன்றைய அரசியல் பின்புலச் சு+ழலுக்கு ஏற்றாற் போல முன்கொண்டு செல்ல இளைய மலையகத்தவர் திடசங்கட்பம் கொண்டுள்ளார்கள்.

அதிகார பகிர்வு சார்ந்து வடக்கு கிழக்கு தலைமைகள் தீர்மானங்களை எடுக்கும் போது மலையக சமூகத்தின் அரசியலைப் புரிந்து கொண்டு செயற்பட முன்வர வேண்டும். 1987 ஆம் ஆண்டு மாகாண சபை முறைமை அறிமுகம் செய்யப்பட்டபோது அதற்கு துணையாக அதுவரை நடைமுறையில் இருந்த 'கம்சபா' முறைமை நீக்கப்பட்டு பிரதேச சபை முறைமை கொண்டுவரப்பட்டது. பிரதேசசபைச்சட்டம் இயற்றப்பட்டது. ஏற்கனவே கம்சபா முறைமையில் உள்வாங்கப்பட்டிருக்காத மலையகப் பெருந்தோட்ட பகுதிகள் பிரதேச சபைச்சட்ட உருவாக்கத்தின்போதும் உள்வாங்கப்படவில்லை. எனவே மலையகப் பெருந்தோட்டம் சார்ந்து வாழும் சுமார் பத்து லட்சம் அளவான மக்கள் பிரதேச சபை உரிமை மறுப்புக்கு உள்ளாகினர்.

இங்கு தமக்கு மாகாண சபை முறைமை ஊடாக அதிகாரத்தை எதிர்பார்த்த இலங்கைத் தமிழர் தரப்பு இதன்போது கொண்டுவரப்பட்ட பிரதேச சபைச் சட்டத்தில் சக தமிழ் சமூகமானது பிரதேச சபை முறைமையிலும் கூட உள்வாங்கப்படாமல் விடப்படுகின்றனர் என்பதை கிஞ்சித்தும் கணக்கில் எடுத்துக்கொள்ளவில்லை. இத்தகைய பாராமுகம் குறித்து இதுவரை எவரும் வருத்தம் தெரிவக்கவோ மாற்று நடவடிக்கை எடுக்கவோ இல்லை. ஆனால் மலையக மக்களது அரசியல் சார்ந்து பேசுவார்கள் எந்த அர்த்தமும் இல்லாமல். 2018 ஆம் ஆண்டு சட்டத் திருத்தங்கள் ஊடாகவே பிரதேச சபையில் பங்கேற்கும் உரிமையை மலையகப் பெருந்தோட்ட மக்கள் சட்டரீதியாகப் பெற்றுக்கொண்டோம்.

எனவே அதிகார பகிர்வு சார்ந்த விடயங்களில் சக சமூகங்களான இலங்கைத் தமிழர்களும், முஸ்லிம்களும் மலையகத் தமிழர்களின் அரசியல் நிலைப்பாடுகளைத் தெரிந்து கொண்டு அவர்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் தமது அதிகார பகிர்வு தீர்மானங்கள் எடுப்பதற்கும் மலையக மக்கள் முன்வைக்கும் அதிகாரப் பகிர்வு தீர்மானங்களுக்கு ஆதரவாக தமது நிலைப்பாட்டை எடுக்கவும் வேண்டும் எனவும் கேட்டுக்கொள்கிறேன் என்றார்

## இடைநடுவிலே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கொண்டு உடனடியாகத் தீர்க்க நடவடிக்கை எடுக்குமாறும் அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற, விவசாயத்தை நவீனமாக்கல் தொடர்பாக அதிகாரிகளுக்கு விளக்கமளிக்கும் கூட்டத்தில் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க இந்த பணிப்புரைகளை வழங்கினார்.

மாகாணத் தலைவர்கள், மாவட்டத் தலைவர்கள் மற்றும் இந்த வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக தெரிவு செய்யப்பட்ட 26 பிரதேச செயலாளர் பிரிவுகளின் தலைவர்கள் இந்தக் கூட்டத்திற்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

விவசாய நவீனமயமாக்கல் வேலைத்திட்டம் தொடர்பில் தேசிய ரீதியில் தீர்மானங்களை எடுப்பதற்காக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் தலைமையில், பிரதமர் உரிய அமைச்சுகளின் செயலாளர்கள் மற்றும் 9 மாகாணங்களின் பிரதம செயலாளர்கள் உள்ளடக்கிய வகையில் நிறுவப்பட்டுள்ள குழுவிற்கு மேலதிகமாக விவசாய நவீனமயமாக்கல் செயலகம் ஒன்றை அமைக்கத் தீர்மானிக்கப்பட்டது. விவசாய நவீனமயமாக்கல் அறிவு மற்றும் சேவைகளுக்கான மையமாக இந்தச் செயலகம் செயற்படவுள்ளது.

ஜனாதிபதியின் பணிப்புரைக்கமைய இந்த வேலைத் திட்டத்திற்குத் தனியார் துறையினரின் பங்களிப்பைப் பெறுவதற்குத் தேவையான சட்ட வரைவுகள் தயாரிக்கப்பட்டு வருவதாகவும் வலியுறுத்தப்பட்டது. அதேபோன்று, விவசாய நவீனமயமாக்கலுக்கு 08 பிரதான அமைச்சுகள் பயன்படுத்தப்படவுள்ளதாகவும் 08 திணைக்களங்களின் ஆதரவுடன் தெரிவு செய்யப்பட்ட 26 பிரதேச செயலகங்களில் இந்த வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப் படவுள்ளதாகவும் குறிப்பிடப் பட்டுள்ளது.

இக்கலந்துரையாடலில் இணைந்துகொண்ட சிரேஷ்ட பேராசிரியர் காமினி சேனாநாயக்க இலங்கை தற்போது எதிர்நோக்கும் விவசாய சிக்கல்கள் தொடர்பிலும் விசேட உரை ஒன்றை நிகழ்த்தினார்.

2024 ஆம் ஆண்டு விவசாய உற்பத்தித் திறனை அதிகரிக்க ஜனாதிபதி செயலகத்தின் ஊடாகத் தேவையான ஒதுக்கீடுகள் வழங்கப்பட்டுள்ளதுடன் அந்தச் செயற்பாட்டுடன் மாத்திரம் நின்றுவிடாது விவசாயத் துறையில் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டில் கவனம் செலுத்துமாறு பொருளாதார விவகாரங்களுக்கான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் கலாநிதி ஆர். எச். சமரதுங்க தனது உரையில் தெரிவித்தார்.

உணவுப்பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் கலாநிதி சுரேன் படகொட, மாகாண பிரதம செயலாளர்கள், துறைசார் நிறுவனங்களின் தலைவர்கள், மாவட்ட செயலாளர்கள், இத்திட்டத்தை நடைமுறைப்படுத்த தெரிவு செய்யப்பட்டுள்ள பிரதேச செயலாளர் பிரிவுகளின் செயலாளர்கள் உள்ளிட்டோர் இக்கலந்துரையாடலில் பங்கெடுத்திருந்தனர்..



காலைக்கதிர் Kalaikkathir

# நாவற்குழியில் வெள்ளம் பாதித்த மக்களுக்குப் பொருள் உதவிகள்







நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலையால் யாழ்.மாவட்டத்தில் வெள்ள அனர்த்தத்திஜூல் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கனடாவில் வசித்தாலும் எமது தாயக மக்களிற்கு கடந்த பத்து வருடங்களிற்கும் மேலாக பற்பல சமூகப்பனிகளையும் வறுமை கோட்டின் கீழ் வாழ்பவர்களுக்கு நிவாரண உதவிகளையும்செய்துவரும்ஒருமுதன்மை சமூக சேவையாளர் சிவலிங்கம் ரட்ணத்தின் நிதிப்பங்களிப்புடன் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்து நாவற்குழி அற்புத அன்னை சனசமூக நிலையத்திலும் சீயோன் தேவாலயத்திலும் தங்கவைக்கப்பட்டுள்ள அனைத்து குடும்பத்தினருக்கு உலர;உணவு மற்றும்பாய், தலையனை ஆகிய பொருள்கள் வழங்கி வைக்கப்பட்டன.

நாவற்குழி பகுதியில் உள்ள பல குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களின் பிரச்சினைகளையும் அவர்களது சூழ்நிலைகளையும் கலாநிதி அகிலன் முத்துகுமாரசுவாமி நேரில் சென்று பார்வையிட்டு அவர்களுக்கு தேவையான உதவிகளை பெற்றுக் கொடுத்துள்ளார்.

இவர்களிற்கான உதவிகளை சாவகச்சேரி பொலிஸ் அத்தியர்சர் பாலித செனவிரட்ன மற்றும் கலாநிதி அகிலன் முத்துக்குமாரசாமி ஆகியோரால் வழங்கி வைக்கப்பட்டன.(05)

# கடந்த 3 வருடங்களுக்குள் 132 சிறுமிகள் வதைப்பு

## கண்டி மாவட்டத்தில் மட்டும்

கண்டி மாவட்டத்தில் 17 பொலிஸ் பிரிவுகளுக்கு உட்பட்ட பிரதேசங்களில், கடந்த 3 வருடங்களுக்குள் 16 வயதுக்கு குறைந்த 132 சிறுமிகள் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர் என கண்டி தேசிய வைத்தியசாலையின் வைத்தியர் பாலித பண்டார சுபசிங்ஹ தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக கருத்து வெளியிட்டுள்ள கண்டி தேசிய வைத்தியசாலையின் வைத்தியர் பாலித பண்டார சுபசிங்ஹ, கண்டி மாவட்டத்தில் 17 பொலிஸ் பிரிவுகளுக்கு உட்பட்ட பிரதேசங்களில், சுமார் 132 சிறுமிகள் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர் எனப் பொலிஸில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்பட்டுள்ள சிறுமிகளில் பெரும்பாலானோர் தங்களுடைய விருப்பத்தின் பேரிலேயே துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டள்ளமையானது பெரும் அபாயகரமானது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் 2018 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரையில், 16 வயதுக்கும் குறைந்த சிறுமிகள் பாலியல் ரீதியில் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்ட சம்பவம் தொடர்பாக நாட்டிலுள்ள பொலிஸ் நிலையங்களுக்கு 6 ஆயிரத்து 307 முறைப்பாடுகள் கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

# பண்டிகை காலத்தை முன்னிட்டு விசேட பாதுகாப்பு நடவடிக்கை

## பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அறிவிப்பு

'எதிர்வரும் பண்டிகை காலத்தை முன்னிட்டு நாடளாவிய ரீதியில் விசேட பாதுகாப்பு வேலைத்திட்டமொன்றை முன்னெடுக்கவுள்ளதாக' பொலிஸ் ஊடகப் பேச்சாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் -

மேற்படி பாதுகாப்பு நடவடிக்கை தொடர்பாக பதில் பொலிஸ் மா அதிபர் ஏற்கனவே இரண்டு விசேட சுற்று நிருபங்களை வெளியிட்டுள்ளார்.

இதன் படி பொதுமக்கள் அதிகளவில் நடமாடும் பகுதிகளில் சிவில் உடையணிந்த பொலிஸ் உத்தியோகத்தர்கள் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்படவுள்ளனர். - இவ்வாறு தெரிவித்துள்ளார். (05)

# நான்கு பில்லியனுக்கும் அதிகமான கையிருப்பு

இந்த ஆண்டின் இறுதியில் நாட்டில் அதிகாரபூர்வ கையிருப்பு நான்கு பில்லியன் அமெரிக்க டொலர்களை விட அதிகமாக காணப்படும் என்றும் இது இந்த வருடத்தில் எதிர்பார்க்கப்பட்ட தொகையை விட அதிகமாகும் என்றும் நிதி அமைச்சு தெரிவித்துள்ளது.

அரசாங்கத்திற்கு அந்நிய செலாவணி வரவால் மொத்த கையிருப்பு கணிசமாக வலுப்பெற்றுள்ளதுடன் இந்த வருடம் டிசெம்பர் மாதத்தில் அரசாங்கம் 787 மில்லியன் அமெரிக்க டொலர் அந்நியச் செலாவணியைப் பெற்றுள்ளதாக நிதியமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து 337 மில்லியன் அமெரிக்க டொலர்களும், ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து 200 மில்லியன் அமெரிக்க டொலர்களும், உலக வங்கியிடமிருந்து 250 மில்லியன் அமெரிக்க டொலர்களும் டிசெம்பர் மாதத்தில் அரசாங்கம் இரண்டாவது தவணையாகப் பெற்றுள்ளது.

வரவு செலவுத் திட்டத்தை வலுப்படுத்துவதும் நாட்டின் வெளிகையிருப்புகளை மேம்படுத்து-வதும் அரசாங்கத்தின் நோக்கமாகும் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

# 5 கோடி ரூபா கப்பம் கோரியவர் கைது

## கொழும்பில் சம்பவம்

கொலை அச்சுறுத்தல் விடுத்து 5 கோடி ரூபா கப்பம் கோரியவரை கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினர் அங்கொடையில் வைத்துக் கைது செய்-துள்ளனர். மிரிஹான பொலிஸாருக்கு அளிக்கப்பட்ட முறைப்பாட்டையடுத்தே இக் கைது நடவடிக்கை இடம்பெற்றுள்ளதாகவும், இதன்போது 47 வயதான நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டவருக்கும், பாதிக்கப்பட்டவருக்கும் இடையே காணப்பட்ட காணிப் பிரச்சினை காரணமாக வெளி நாட்டில் உள்ள தனது உறவினர் ஒருவரின் மகன் ஊடாக இக் கொலை மிரட்டல்களை அந்நபர் விடுத்து வந்துள்ளார் எனத் தெரியவந்துள்ளது.

இந்நிலையில் இது குறித்த மேலதிக விசாரணைகளைக் குற்றப்புலனாய்வுப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (05)

# அடிதடியில் ஒருவர் காயம் வவுனியாவில் சம்பவம்

## சம்பந்தப்பட்டோர் ஆசிரியர்கள் எனத் தகவல்

வவுனியா, சிதம்பரபுரம் பகுதியில் அமைந்துள்ள பாடசாலையொன்றில், ஆசிரியர்கள் மூவருக்கிடையே இடம்பெற்ற மோதலில் ஒருவர் படுகாயமடைந்துள்ள சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

வியாழக்கிழமை இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு அளிக்கப்பட்டுள்ள நிலையில் படுகாயமடைந்தவர் வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இந்தச் சம்பவம் தொடர்பாக வவுனியா தெற்கு வலயக்கல்வி பணிப்பாளரிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது, இது குறித்து விசாரணை செய்வதற்காக குழு ஒன்றை அனுப்பியுள்ளதாக அவர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

# யாழ். குடத்தனை கிழக்கில் இரவிரவாக வீடுகளில் வாள் வெட்டுக் குழு வன்முறை

## வாள் வெட்டில் ஒருவர் காயம்

யாழ்ப்பாணம், குடத்தனை கிழக்கு மாளிகைத்திடல் பகுதியில் கடந்த சில நாள்களாக இடம்பெற்றுவரும் வாள் வெட்டு சம்பவத்தின் தொடர்சியாக வியாழக்கிழமை வாள் வெட்டு சம்பவமொன்று பதிவாகியுள்ளது.

இதில் அதே இடத்தை சேர்ந்த இளம் குடும்பஸ்தர் ஒருவர் காயமடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இதேவேளை புதன்கிழமை இடம்பெற்ற வாள் வெட்டு சம்பவத்தில் படுகாயமடைந்தவர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையிலிருந்து யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

வியாழக்கிழமை இரவு வாள் வெட்டுகுழு ஒன்று தமது எதிராளிகளை தேடி குடத்தனை கிழக்கு, அம்பன் கிழக்கு பகுதிகளில் தேடுதல் நடத்தியதாகவும் அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

குடத்தனையில் வியாழக்கிழமை மதியம் இரண்டு குழுக்களுக்கிடையில் இடம்பெற்ற வன்முறையை கட்டுப்படுத்த சிறப்பு அதிரடிப் படையினர் துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டுள்ளனர்.

இதேவேளை பருத்தித்துறை பொலிஸாரும் வன்முறையை கட்டுப்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

பொலிஸ் மற்றும் சிறப்பு அதிரடிபடை சென்றபின்னர் அன்றிரவு பதினொரு மணிவரை வீடுகள் மீது தாக்குதல், எதிரணியை தேடுதல் நடவடிக்கைகள் இடம் பெற்றிருப்பதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

குறித்த சம்பவத்தைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளை உரியதரப்புக்கள் மேற்கொள்ளவில்லை என பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர். (05)

# எம்பிலிபிட்டி சிறைச்சாலை கைதி வைத்தியசாலையிலிருந்து ஓட்டம்

எம்பிலிபிட்டி சிறைச்சாலை கைதி ஒருவர் வயிற்றில் ஏற்பட்டுள்ள சுகவீனம் காரணமாக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் சிறைச்சாலை அதிகாரிகளிடமிருந்து தப்பிச்சென்றுள்ளார் எனப் பொலி-ஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் புதன்கிழமை இடம்பெற்றுள்ளது.

தப்பிச்சென்றவர் எம்பிலிப்பிட்டி பிரதேசத்தை சேர்ந்த 25 வய-துடையவராவார்.

இவர் 250 மில்லிகிராம் நிறையுடைய ஹெரோயின் போதைப்பொருளுடன் பொலி-ஸாரால் கைது செய்யப்பட்ட நிலையில் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்பட்ட பின்னர் 10,000 ரூபா அபராதம் செலுத்த நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அபராதத் தொகையை செலுத்த முடியாததால் இவரை எம்பிலிப்பிட்டி சிறைச்சாலையில் எதிர்வரும் 12ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்நிலையில் இவர் வயிற்றில் ஏற்பட்டுள்ள சுகவீனம் காரணமாக எம்பிலிபிட்டிய பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் சிறைச்சாலை அதிகாரிகளிடமிருந்து தப்பிச்சென்றுள்ளார்.

தப்பிச் சென்ற கைதியை தேடும் பணியில் சிறைச்சாலை அதிகாரிகள் மற்றும் எம்பிலிபிட்டி பொலிஸார் தீவிரமாக செயற்பட்டு வருகின்றனர். (05)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## எச்சரிக்கையோடு இருப்போம்

உலகில் மீண்டும் கொரோனா பரவல் அச்சம் ஏற்பட்டுள்ளது. இது 2020இல் ஏற்பட்டதைப் போன்று பெருந்தொற்று, மு–டக்கம், உயிரிழப்புக்கள் என்ற அளவிற்கு அச்சுறுத்தலாக இல்லை என்கிறபோதும் அது குறித்து எச்சரிக்கையுடனும் முற்காப்பு நடவடிக்கைகளுடனும் நடந்துகொள்வதே சிறந்தது.

இந்தியாவில் பரவி வரும் ஒமிக்ரோன் ஜேஎன் 1 கொவிட் தீநுண்மி (வைரஸ்) மாறுபாடு இலங்கைக்குள்ளும் நுழைந்துள்ளதாகத் தாம் நம்புகிறார் என்று ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் ஒவ்வாமை, நோயெதிர்ப்பு மற்றும் உயிரணு உயிரியல் துறையின் தலைவர் பேராசிரியர் சந்திம ஜீவந்தர தெரிவித்துள்ளார்.

இலங்கையில் கொவிட் பரிசோதனைகள் மிகக் குறைந்தமட்டத்திலேயேஇருப்பதால்இந்தத்தொற்றின் பரவுகை வேகம், வீரியம் குறித்த உண்மைகளை அறிவியல் ரீதியாக உடனடியாக முன்வைக்க முடியவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

தொற்றுப் பரவுகைச் சூழ்நிலையைக் கருத்தில்கொண்டு, முதியவர்கள், பல்வேறு நோய்களால் பலவீனமான நோய் எதிர்ப்பு சக்தி உள்ளவர்கள், அதேபோல் மோசமான காற்றோட்டம் உள்ள நெரிசலான சூழலில் வாழ்பவர்கள் மீண்டும் முகக்கவசங்களை(மாஸ்க்)பயன்படுத்துவதுமிகவும் முக்கியம் என்று பேராசிரியர் சுட்டிக்காட்டுகிறார்.

சோர்வு, சாப்பிடஇயலாமைமற்றும்வாந்தியெடுக்கும் போக்கு ஆகியவை இந்த ஒமிக்ரோன் ஜேஎன் 1வகை தொற்றின் அறிகுறிகளாகும். இந்த அறிகுறிகள் தென்பட்டால் உடனடியாக மருத்துவ ஆலோசனை பெறுவது அவசியம் என்பது பேராசிரியரின் கருத்து.

நாட்டில் பெரும்பாலானவர்களுக்கு கொவிட் தடுப்பூசி வழங்கப்பட்டிருந்தாலும் அது 100 சதவீதம் பூர்த்தி செய்யப்படவில்லை. தடுப்பூசி வழங்கும் வேலைத்திட்டம் இன்னும் நடைமுறையில் உள்ளது. அதனால் அதிக ஆபத்துள்ள குழுக்களுக்கு பூஸ்டர் தடுப்பூசி வழங்கப்படுவது இந்தத் தருணத்தில் முக்கியம் என்று சந்திம ஜீவந்தர சுட்டிக்காட்டுகிறார்.

இன்ஃப்ளுயன்ஸா போன்ற நோயின் காரணமாக, இந்தியாவின் கொச்சியில் பரிசோதிக்கப்பட்ட நோயாளிகளில் 30 சதவீதம் பேர் இந்த வகை கோவிட் நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று பேராசிரியர் கூறினார். இதுதான் இப்போதைக்கு இலங்கைக்கு நெருக்கமாக இந்தத் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின்அதிகூடியஎண்ணிக்கையாகும். இந்தியாவில் இது தொடர்பான அடிப்படை எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளன.

வான்வழிப் போக்குவரத்து உட்பட அனைத்துக் கதவுகளும்ஊடாட்டங்களும்இருப்பதால்இந்தியாவில் இருந்து தொற்று வேகமாக இலங்கைக்குப் பரவுவதற்கான வாய்ப்புக்களை நிராகரிக்க முடியாது. ஏற்கனவே தடுப்பூசி எடுத்திருக்கின்றோம், அதனால் ஆபத்து இல்லைத்தானே என்றோ முதல் கொரோனாவினாலேயே எம்மை ஒன்றும் செய்யமுடியவில்லை இப்போது வந்திருப்பது மட்டும் என்ன செய்துவிடும் என்றோ அலட்சியமாக இருந்துவிடாமல் எச்சரிக்கையோடு இருப்பதே சிறந்தது. தேவையான அனைத்துப் பாதுகாப்பு நடவடிக்கைகளையும் எடுத்து எம்மையும் மற்றவர்களையும் காப்போம்.

# தமிழ் அரசுக் கட்சி தலைமைக்கான மும்முனைப் போட்டி

டி.பி.எஸ்.ஜெயராஜ்



வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள ஐந்து தேர்தல் மாவட்டங்களிலும் நாடாளுமன்றப் பிரதிநிதிகளைக்கொண்ட ஒரே கட்சி இலங்கை தமிழ் அரசியல் கட்சி. தற்போது அக் கட்சிக்கு தேசியப் பட்டியல் உட்பட நாடாளுமன்றத்தில் ஆறு ஆசனங்கள் உள்ளன.

அவர்களில் இருவர் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் இருந்தும் தலா ஒருவர் வன்னி, திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களிலிருந்தும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் திகாமடுல்ல/அம்பாறை தேர்தல் மாவட்டத்தைச் சேர்ந்



தவர். எனவே, வடக்கு - கிழக்கின் அனைத்து தேர்தல் மாவட்டங்களிலும் உள்ள தமிழர்களை நாடாளுமன்றத்தில் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரே கட்சியாக தமிழ் அரசுக் கட்சியே இருக்கின்றது. வேறு எந்தத் தமிழ்க் கட்சிக்கும் இந்தச் சிறப்புக் கிடையாது.

தமிழ் அரசுக் கட்சி 1949இல் தொடங்கப்பட்டது. அதன் தொடக்கத்தில் இருந்து பல ஏற்ற தாழ்வுகளுடன் வண்ணமயமான வரலாற்றைக் கொண்டுள்ளது. புதிய மிலேனியத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு (TNA) எனப்படும் முதன்மையான தமிழ் அரசியல் கட்டமைப்பில் தமிழ் அரசுக் கட்சியே முதன்மை இடத்தைப் பிடித்து மேலாதிக்கக் கட்சியாக மாறியது. 2004ஆம் ஆண்டு முதல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்றம், மாகாணம் மற்றும் உள்ளாட்சித் தேர்தல்களில் தமிழ் அரசுக் கட்சியின் 'வீடு' சின்னத்திலேயே போட்டியிட்டது.

இந்த ஆண்டின் தொடக்கத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் பிளவு ஏற்பட்டது, தமிழ் தேசியக் கூட்டமைப்பின் மூன்று அங்கத்துவக் கட்சிகளில் இரண்டு, அதாவது தமிழீழ விடுதலை அமைப்பு (ரெலோ) மற்றும் தமிழீழ மக்கள் விடுதலை அமைப்பு (புளொட்) ஆகிய இரு கட்சிகளும் வெளியேறி, வேறு மூன்று கட்சிகளுடன் இணைந்து ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியாக மாறியது. தாங்களே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்று உரிமை கோரியது. நாடாளுமன்றத்தில் ரெலோ மற்றும் புளொட் கட்சிகளுக்கு 4 உறுப்பினர்கள் இருப்பதால், தமிழ் அரசுக்கட்சியின் உத்தியோகபூர்வ நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை பத்தில் இருந்து ஆறாகக் குறைந்துள்ளது, இருப்பினும் தனிப்பெரும் தமிழ்க் கட்சியாக இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி தொடர்ந்தும் நாடாளுமன்றத்தில் அதிக ஆசனங்களைத் தக்கவைத்துள்ளது. தற்போது தமிழ் அரசுக் கட்சி உட்கட்சி நெருக்கடியின் வாசலில் இருக்கின்றது.

நீண்டகாலமாகத் தாமதமான கட்சியின் பொதுச் சபை மாநாடு அடுத்த ஆண்டு ஜனவரி கடைசி வாரத்தில் திட்டமிடப்பட்டுள்ளது. மாவை என அழைக்கப்படும் தற்போதைய கட்சித் தலைவர் சோமசுந்தரம் சேனாதிராஜா தனது பதவியிலிருந்து விலகும் அல்லது விலக நிர்ப்பந்திக்கப்படும் தருவாயில் இருப்பதால், ஒரு முக்கியமான தலைமை மாற்றத்தைக் கட்சி எதிர்நோக்கியுள்ளது. மாவை 2014 முதல் கட்சித் தலைவராக உள்ளார். எனவே, திருகோணமலையில் வரும் ஜனவரி மாதம் நடைபெற உள்ள மாநாட்டில் புதிய தலைவர் தேர்ந்தெடுக்கப்படுவார்.

இந்தத் தடவை கட்சித் தலைவர் பதவிக்கு மூன்று பேர் போட்டியிடுகிறார்கள். அப்படி மூன்று போட்டியாளர்கள் களமிறங்குவது ஒரு கட்சியின் கண்ணோட்டத்தில் சிக்கலாகத் தோன்றுகிறது. மதியாபரணம்ஆபிரகாம்சுமந்திரன், சிவஞானம் ஸ்ரீதரன் மற்றும் சீனித்தம்பி யோகேஸ்வரன் ஆகிய மூவரும் தலைமைப் பதவிக்கு ஆசைப்படுகிறார்கள். சுமந்திரன் மற்றும் ஸ்ரீதரன் இருவரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், யோகேஸ்வரன் மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்.

புதிய தலைவரை தேர்ந்தெடுப்பதற்கான உட்கட்சி தேர்தல் வரவேற்கத்தக்கதுதான். இருப்பினும், தமிழ் அரசுக் கட்சி அதன்தொடக்கத்திலிருந்தேஅதன் தலைவரை தேர்ந்தெடுப்பதற்காக உட்கட்சித்தேர்தலைஎதிர்கொண்டதில்லை.நேரடிப் போட்டியைத் தவிர்க்கும் நடைமுறையை அது ஏற்றுக்கொண்டிருந்தது. போட்டியிட விரும்பியவர்களுக்கு இடையில் பேச்சு நடத்தி ஒரு மனதாகத் தலைவரைத் தேர்ந்தெடுத்து வந்தது. 1949இல் நிறுவப்பட்ட காலத்திலிருந்தே தலைவரைத் தேர்ந்தெடுப்பதற்கு கட்சிக்குள் இந்த ஒருமித்த முறையேபின்பற்றப்பட்டுவந்தது. போட்டடி நடப்பது இதுவே முதல் தடவை.

### தந்தை செல்வா

தந்தைசெல்வாஎன்றுஅழைக்கப்படும் சாமுவேல் ஜேம்ஸ் வேலுப்பிள்ளை செவநாயகம் கட்சியின் இணை நிறுவனர் மற்றும் முதல் தலைவர் ஆவார். எஸ்.ஜே.வி.செல்வநாயகம் அவரது ஆதரவாளர்களால் ஈழத்து காந்தி (ஈழத்தின் காந்தி) என்றும் போற்றப்பட்டார். அவர் விரும்பியிருந்தால் அவரது வாழ்நாள் முழுவதும் கட்சியின் தலைவராக இருந்திருக்கலாம். இருப்பினும் செல்வா தனது முதல் பதவிக் காலத்தின் பின்னர் தலைவர் பதவியில் இருந்து விலகினார்.

இருந்தபோதிலும் செல்வா விலகி இருந்த அதேவேளையில் வன்னியசிங்கம், நாகநாதன், ராஜவரோதயம், இராசமாணிக்கம் மற்றும் அமிர்தலிங்கம் போன்ற அவரது பிரதிநிதிகள் சுழற்சி முறையில் கட்சியின் தலைவர்களாகப் பதவி வகித்தனர். செல்வாவின் ஆசீர்வாதத்துடன் ஒருமித்த ஏற்பாட்டில் முன்கூட்டியே முடிவு செய்யப்பட்டதால்தேர்தல்எதுவும்நடக்கவில்லை. 1973ஆம் ஆண்டு அன்றைய வட்டுக்கோட்டை முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் மற்றும் மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் செல்லையா இராஜதுரை ஆகியோர் கட்சித் தலைவர் பதவிக்குப் போட்டியிடத் தயாராக இருந்தனர். உட்கட்சித் தேர்தல் நடக்க வாய்ப்பு இருந்தது. இந்த மோதலால் கட்சியில் விரிசல் ஏற்படக்கூடும் என்று அஞ்சப்பட்டது. செல்வநாயகம் தலையிட்டு ராஜதுரையைபோட்டியில்இருந்து விலகச் செய்தார். அமிர்தலிங்கம் தலைவராக்கப்பட்டார்.

தமிழ் அரசுக் கட்சியின் வரலாற்றில் முதன்முறையாக, புதிய தலைவரைத் தேர்ந்தெடுப்பதற்கான உட்கட்சி வாக்



கெடுப்புக்கு இப்போதுதான் அக் கட்சி செல்கிறது. வடக்கில் பதவியில் இருக்கும் இரு நாடாளுமன்ற உறுப்பினர்களும், கிழக்கிலிருந்து ஒரு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் களமிறங்கும் முத்தரப்புப் போட்டி இது.

தமிழீழ விடுதலைப் புலிகளுடனான போர் 2009இல் முடிவடைந்த பின்னர், 2010இல் இந்த மூவரும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு (TNA) நாடாளுமன்ற உறுப்பினர்களாக தமிழ் அரசுக் கட்சியின் கீழ் போட்டியிட்டு நாடாளுமன்றத்தினுள் நுழைந்தனர். மூவரும் கிட்டத்தட்ட ஒத்தவயதைச்சேர்ந்தவர்கள்,

### மும்முனைப் போட்டி

போட்டியிடும் மூவரில் மூத்தவரான எம்.ஏ.சுமந்திரன் 1964ஆம் ஆண்டு பிறந்தார். தொழில்ரீதியாகஒருசட்டத்தரணி. 2010ஆம் ஆண்டு முதன் முதலாக தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்டார். இதையடுத்து 2015 மற்றும் 2020ஆம் ஆண்டு தேர்தல்களில் யாழ். மாவட்டத்தில் இருந்து நாடாளுமன்றத்திற்குத் தெரிவானார்.

மூவரில் அடுத்தவர் எஸ்.சிறீதரன் 1968இல் பிறந்தவர். அவர் முன்னாள் ஆசிரியர் மற்றும் அதிபர். சிறீதரன் 2010, 2015 மற்றும் 2020 தேர்தல்களில் யாழ்ப்பாணமாவட்டத்தில்இருந்து தொடர்ச்சியாக நாடாளுமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டார்.

(7ஆம் பக்கம் பார்க்க...)

காலைக்கதிர் Kalaikkathir

# அழுகிய விதை உருளைக்கிழங்கு யாழ். விவசாயிகளுக்கு வழங்கல்

## அங்கஜன் ஜனாதிபதிக்குக் கடிதம்

யாழ்ப்பாண விவசாயிகளுக்கு வழங்கவென கொண்டுவரப்பட்ட 21 மெற்றிக் தொன் விதை உருளைக்கிழங்குகள் அழுகிய நிலையில் காணப்பட்டமை தொடர்பில் விரிவான விசாரணையும், விவசாயிகளுக்கான நஸ்டஈடும் அவசியம் எனத் தெரிவித்து ஜனாதிபதிக்கு அங்கஜன் இராமநாதன் கடிதமொன்றை எழுதியுள்ளார்.

இக்கடிதத்தில், யாழ்ப்பாணத்தில் 2023ஃ24 பெரும்போகத்தில் விதைப்பதற்குத் தேவையான விதை உருளைக்கிழங்குளை மானிய அடிப்படையில் வழங்குமாறு, ஏழாலை விவசாய சம்மேளனத்தின் வேண்டுகோளுக்கமைய யாழ்,கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்ற குழுக்களின் பிரதித் தவிசாளருமான அங்கஜன் இராமநாதன், விவசாய அமைச்சர் மற்றும் அமைச்சின் செயலாளருக்கு அனுப்பிய கடிதம் மற்றும் அதற்கு அதிகாரிகள் வழங்கிய பதில் கடிதங்களின் பிரதிகளும் இணைக்கப்பட்டுள்ளன.

அதன்படி, 01.10.2023 அன்று, யாழ்ப்பாணத்தில் 2023-24 பெரும்போகத்தில் விதைப்பதற்கு தேவையான விதை உருளைகிழங்குளை மானிய அடிப்படையில் வழங்குமாறு அங்கஜன் இராமநாதனால் விவசாயஅமைச்சர்மற்றும்அமைச்சின் செயலாளருக்கு கடிதமூலம் கோரிக்கை வைக்கப்பட்டது.

11.10.2023 அன்று இதற்கான திட்ட முன்மொழிவை கோரி அமைச்சின் விவசாய அபிவிருத்திக்கான பணிப்பாளரால், மாவட்ட செயலாளர் ஊடாக மாவட்ட விவசாய பணிப்பாளருக்குக் கடிதம் அனுப்பப்பட்டது.



இந்நிலையில் 20.10. 2023 அன்று, விதை உருளைக்கிழங்குகள் இறக்குமதி செய்யப்படும் நாடுகளில் அவற்றுக்கான இருப்பு இன்மையால் குறித்த மானியத்தை விவசாய அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்படும் விவசாய நவீனமயமாக்கல் திட்டத்தின் ஊடாக வழங்க முடியாது என திட்ட பணிப்பாளரால் கடிதமூடாக அங்கஜன் இராமநாதனுக்கு அறிவிக்கப்பட்டது. இவ்வாறு அறிவிக்கப்பட்ட நிலையில், அண்மைய நாள்களில் ஊடகங்கள் வாயிலாக அறிந்துகொண்ட செய்தி அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

மானிய திட்டம் நிறுத்தப்பட்டதாக எழுத்துபூர்வமாக அறியத்தரப்பட்டபின்னர் ஒரு மாத கால இடைவெளியில் விதை உருளைக்கிழங்குகள் இறக்குமதி செய்யப்பட்டு அவற்றை விவசாயிகளுக்கு வழங்குவதற்காக களஞ்சியத்தில் சேமிக்கப்பட்டுள்ளதாக அறியக்கிடைக்கிறது. இதன் சாத்தியத்தன்மை குறித்தும் ஆராய வேண்டியுள்ளது.

அதேநேரம், இந்த விதை உருளைக்கிழங்குகளின் மானிய விநியோகம் தொடர்பாக விவசாய அமைச்சர் கலந்துகொண்ட மாவட்ட விவசாய குழு கூட்டத்தில் அதிகாரிகளால் எவ்வித தகவலும் முன்வைக்கப்படவில்லை.

இதனால் குறித்த விதை உருளைக்கிழங்குகள் உரிய நடைமுறைகளை மீறி நாட்டுக்கு கொண்டுவரப்பட்டு விவசாயிகளுக்கு விநியோகிக்க திட்டமிடப்பட்டிருந்ததா என்ற சந்தேகம் வலுப்பெற்றுள்ளது.

ஆகையால் அடுத்தாண்டு ஆரம்பத்தில் (2024 ஜனவரி) யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யவுள்ள ஜனாதிபதி ஏற்பாடு செய்துள்ள மாவட்ட ஒருங்கிணைப்புகுழுகூட்டத்துக்கு முன்பாக, இவ்விடயம் தொடர்பான சுயாதீன விசாரணைகளை மேற்கொள்வதோடு இத்தவறுகள் மீண்டும் இடம்பெறாது என்பதை உறுதிப்படுத்தவும் வேண்டும்.

மேலும் உருளைக்கிழங்கு செய்கைக்காக தயார்படுத்திய செலவுகளைகுறித்தநிறுவனத்திடம் இருந்து பெற்று இதனால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு வழங்குவதுடன், அவர்கள் இந்த பருவகாலத்தில் மாற்றுப்பயிர்களை பயிரிடுவதற்கான உதவிகளை விவசாய நவீனமயமாக்கல் திட்டத்தின் ஊடாக மேற்கொள்ள வேண்டும் என்றும் இந்தக் கடிதத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது. (05)

# பொலிஸ் விசேட சுற்றிவளைப்புகளில் 4 நாள்களில் 8 ஆயிரம் பேர் கைது

## பொலிஸ் ஊடகப் பேச்சாளர் கருத்து



குற்றச்செயல்களில் ஈடுபடும் குழுக்களை ஒடுக்கும் விசேட வேலைத் திட்டத்தின் கீழ் நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட நான்காம் நாள் சுற்றிவளைப்புகளில் 2,008 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதுவரை மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புகளில் 8,561 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும் இதன்போது போதைப்பொருள் வர்த்தகர்களுக்கு சொந்தமான 92 மில்லியன் பெறுமதியான சொத்துக்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன எனவும் பொலிஸ் ஊடகப்பேச்சாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான சட்டத்தரணி நிஹால் தல்துவ தெரிவித்தார்.

போதைப்பொருள் வர்த்தகம் மற்றும் திட்டமிட்ட குற்றச் செயல்களில் ஈடுபடும் குழுக்களை ஒடுக்கும் விசேட வேலைத்திட்டம் பதில் பொலிஸ் மா அதிபர் தேபந்து தென்னக்கோனின் பணிப்புரைக்கு அமைய முப்படைகளின் ஒத்துழைப்புகளுடன் நாடளாவிய ரீதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை முதல் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

அதற்கமைவாக செவ்வாய்க்கிழமை அதிகாலை 12.30 மணி தொடக்கம் வியாழக்கிழமை அதிகாலை 12.30 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேர சுற்றிவளைப்புகளில் 2,008 பேர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், இதுவரை நான்கு நாள் முடிவில் 8,561 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவற்றுள் மாளிகாவத்தை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட லக்செவன அடுக்குமாடி குடியிருப்பில் முப்படையினர் இணைந்து மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது போதைப்பொருள்களுடன் 31 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை போதைப்பொருள் விற்பனையாளர்களுக்கு சொந்தமான சுமார் 920 லட்சம் ரூபா பெறுமதியான சொத்துக்களை பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. இவற்றுள் இரு பஸ்கள், இரு கார்கள், இரு மோட்டார் சைக்கிள்கள், 4 காணிகள் மற்றும் வீடொன்றும் உள்ளடங்குவதாகவும் இந்த சொத்துக்களை சந்தேகநபர்கள் உறவினர் மற்றும் நண்பர்கள் பெயர்களில் கொள்வனவு செய்து அதனை மறைத்து வைத்திருந்தனர் எனவும் இது தொடர்பில் சட்டவிரோத சொத்து விசாரணை பிரிவுவிசாரணைகளைமுன்னெடுத்து உள்ளதாகவும் பொலிஸ் பேச்சாளர் தெரிவித்தார்.

இதனிடையே 2 கிலோ 400 கிராம் ஹெரோயின் போதைப் பொருள் ,ஒரு கிலோ 200 கிராம் ஐஸ், ஒரு கிலோ 200 கிராம் கஞ்சா, 12 கிராம் ஹஷீஷ், 5 கிலோ 200 கிராம் மாவா, 17,054 போதைப்பொருள் மாத்திரைகள் மற்றும் 73,833 கஞ்சா செடிகளும் கைப்பற்றப்பட்டுள்ளன என அவர் மேலும் தெரிவித்தார்.(05)

முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City

எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!

இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!

உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்

முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்

SUPERMARKET

4th Project

இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd



தொடர்புகளுக்கு: 0777 43 5557


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இந்த விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 390/=
Chikne Fried Rice with
Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable
In Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swahpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# போதைப்பொருள் வர்த்தகத்தில் தொடர்பு; 4665 பேர் சந்தேகத்துக்குரிய பட்டியலில்

போதைப்பொருள் குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புடைய 4665 பிரதான சந்தேகநபர்களின் பெயர்ப்பட்டியல் புலனாய்வுப்பிரிவினரால் வழங்கப்பட்டுள்ளது.

இவர்களில் கடந்த 4 நாள்களில் 731 சந்தேகநபர்களும், பெயர் பட்டியலில் இல்லாத 8458 சந்தேகநபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்தார்.

இந்த சுற்றிவளைப்புக்களில் இதுவரை 431 மில்லியன் ரூபா பெறுமதியான போதைப்பொருள்களும், 162 மில்லியன் ரூபா பெறுமதியான சொத்துக்களும் கைப்பற்றப்பட்டுள்ளன எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் -

வடக்கு, கிழக்கில் 30 ஆண்டு கால யுத்தத்தை நிறைவு செய்வதற்கு ஒத்துழைப்பு வழங்கியதைப் போன்று, நாடளாவிய ரீதியில் போதைப்பொருளுக்கு எதிராக முன்னெடுக்கப்படும் யுத்தத்துக்கும் மக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

போதைப்பொருள் தொடர்பான நடவடிக்கைகளை முன்னெடுக்கும் போது 3 வகைகளின் கீழ் அவற்றுடன் தொடர்புடையவர்களின் பெயர்ப்பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது.

அவற்றில் முதலாவது பாரியளவில் போதைப்பொருள் கட்டத்தலில் ஈடுபடுபவர்களாவர். இரண்டாவது அவற்றை விநியோகிப்பவர்கள்.

மூன்றாவது போதைப்பொருள் பாவனையாளர்கள். நாம் போதைப்பொருள் பாவனையாளர்களை விடுத்து ஏனைய இரு பிரிவினரையும் இலக்காகக் கொண்டே எமது சுற்றுவளைப்புக்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

பிரதானபோதைப்பொருள்கடத்தல்முழுமையாகக் கட்டுப்படுத்தப்பட்டால் அடுத்த இரு பிரிவினரையும் கட்டுப்படுத்துவது மிக இலகுவானதாகும்.

போதைப்பொருளை விநியோகிப்பவர்கள் மற்றும் அவர்களுடன் தொடர்புடைய பாதாள உலகக் குழுவினர் தொடர்பில் விசேட அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

இவற்றை அடிப்படையாகக் கொண்டு புலனாய்வுப்பிரிவினரால் 4665 சந்தேகநபர்களை உள்ளடக்கிய பெயர்ப்பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய கடந்த 4 நாள்களில் இவர்களில் 731 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்த சுற்றிவளைப்புக்களின் போது பட்டியலில் இல்லாதவர்களும் கண்டுபிடிக்கப்பட்டு கைது செய்யப்படுகின்றனர். இவ்வாறு ஒட்டு மொத்தமாக 8458 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். (புதன்கிழமை நள்ளிரவு 12 மணிவரை).

இவர்களில் 346 பேரை தடுத்து வைத்து விசாரிப்பதற்கான உத்தரவு பெறப்பட்டுள்ளது. 61 பேரிடம் சொத்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

697 பேர் புனர்வாழ்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். கடந்த 4 நாள்களில் கைப்பற்றப்பட்டுள்ள ஹெரோயின், ஐஸ், கொக்கைன், கஞ்சா, ஹஷீஸ் உள்ளிட்ட போதைப்பொருள்களின் பெறுமதி 431 மில்லியன் ரூபாவாகும்.

அதேபோன்று கைப்பற்றப்பட்டுள்ள வாகனங்கள், காணி, கட்டடங்கள், தங்கம் மற்றும் பணம் என்பவற்றின் பெறுமதி 162 மில்லியன் ரூபாவாகும். இந்த சொத்துக்கள் அரசுடைமையாக்கப்படும்.

கிறிஸ்மஸ் மற்றும் புத்தாண்டு காலங்களைத் தவிர்த்து ஏனைய அனைத்து நாள்களிலும் தொடர்ச்சியாக இந்த சுற்றிவளைப்புக்கள் முன்னெடுக்கப்படும்.

2024 ஜீன் 30 ஆம் திகதியாகும் போது போதைப்பொருள் பாவனை தொடர்பில் பாரிய மாற்றம் ஏற்பட்டிருக்க வேண்டும் என்பதே எமது இலக்காகும். எனவே இரு வாரங்களில் சுற்றிவளைப்புக்கள் நிறுத்தப்பட மாட்டாது.

எவ்வித அறிவிப்புக்களும் இன்றி விசேட அதிரடிப்படையினர் உள்ளிட்டோரை களமிறக்கி சுற்றி வளைப்புக்கள் முன்னெடுக்கப்பட்டால் மக்கள் மத்தியில் வீண் அச்சம் ஏற்படும்.

அதனைக் கருத்திக் கொண்டே முன்னரே அறிவித்து சுற்றிவளைப்புக்கள் முன்னெடுக்கப்பட்டன. பிரதான போதைப்பொருள் கட்டத்தல்காரர்களை தப்பிக்கச்செய்வது எமது நோக்கமல்ல. கைப்பற்றப்படும் போதைப்பொருள்களை மீள் ஏற்றுமதி செய்வது தொடர்பில் எவ்வித தீர்மானமும் எடுக்கப்படவில்லை.

பாடசாலை மாணவர்களை இலக்கு வைத்து போதைப்பொருள்களை விநியோகிப்பவர்கள் தொடர்பான பெயர் பட்டியல் புலனாய்வு பிரிவினரால் எமக்கு வழங்கப்பட்டுள்ளது. இவர்களைக் கைது செய்வதற்கான சுற்றிவளைப்புக்களும் பிரத்தியேகமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. - என்றார். (05)

# மாளிகாவத்தையில் கஞ்சா கலந்த மாவா உற்பத்திப் பொருள்களுடன் ஒருவர் கைது

கொழும்பு - மாளிகாவத்தை பிரதேசத்தில் வீடொன்றிலிருந்து கஞ்சா கலந்த மாவா போதைப்பாக்கு உற்பத்தி செய்யும் பொருள்களுடன் சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசேட சோதனை நடவடிக்கையின் போதே இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

விசாரணையில் கஞ்சா கலந்த மாவா 3 கிலோ 520 கிராம், கஞ்சா போதைப்பாக்கு, மின்சார தராசு, இரசாயனப் பொருள்கள் மற்றும் மேலும் பல பொருள்கள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மாளிகாவத்தை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# கோரலவில் காருடன் இருவர் கைது போதைப்பொருள் குற்றச்சாட்டில்

சுமார் 50 லட்சம் ரூபா பெறுமதியான போதைப் பொருள் மற்றும் சுமார் இரண்டு கோடி ரூபா பெறுமதியான காருடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்கள் இருவரும் டுபாய் நாட்டிலிருந்து போதைப்பொருள் கடத்தலில் ஈடுபடும் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என்றும் பாணந்துறை வலன மத்திய ஊழல் தடுப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

மொரகஹேன கோரல பிரதேசத்தில் உள்ள மூன்று மாடி வீடு ஒன்றில் பாரியளவிலான போதைப்பொருள் கடத்தல் இடம்பெறுவதாக பாணந்துறை வலன மத்திய ஊழல் ஒழிப்பு அதிரடிப்படையினருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். (05)

# கரடி தாக்குதலுக்குள்ளான இளைஞன் பதுளை வைத்தியசாலையில் சேர்ப்பு

கரடி தாக்குதலுக்கு இலக்கான இளைஞர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில், பதுளை போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார் .

புத்தல , கதிர்காம பிரதேசத்தை சேர்ந்த 28 வயதுடைய இளைஞரே கரடி தாக்குதலுக்கு இலக்காகியுள்ளார்.

குறித்த பிரதேசத்தில் நிலக்கடலை தோட்டத்தில் வேலையிலீடுபட்டிருந்த இளைஞனை திடீரென கரடி ஒன்று தோட்டத்திற்குள் புகுந்து அவர் உடலில் பாய்ந்து தாக்கியதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

பின்னர் அருகில் இருந்த நண்பர்கள் கரடியை விரட்டியடித்து அவரை பதுளை போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்த்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)



## ரணிலுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்றரை வருடங்களுக்கு முன்னதாகவே தமிழ் தரப்புடன் பேச்சுக்களை ஆரம்பித்தபோது நாம் எச்சரிக்கை விடுத்தோம். அந்தப் பேச்சுக்களில்நாம்பங்கேற்பதைமுழுமையாக நிறுத்தியதோடு,அவ்வாறு பங்கேற்பதா னது அவருக்கு வழங்குகின்ற அங்கீகாரமாக அமையும் என்றும் குறிப்பிட்டிருந்தோம்.

அந்த அடிப்படையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தற்போது மிகத்துணிவுடன் முக்கியமான விடயத்தினைவெளிப்படுத்தியுள்ளார். விசேடமாக, தன்னால் இனப் பிரச்சினைக்கு தீர்வினை வழங்க முடியாது என்று கூறியுள்ளார். புதிய பாராளுமன்றத்தின் ஊடாகவே தீர்வினை வழங்க முடியும் என்று அறிவித்ததோடு, புதிய அரசியலமைப்பின்மூலம்ஒருவருடத்துக்குள் அதனை வழங்க முடியும் என்று கூறியிருக்கின்றார்.

இந்தக் கூற்றுக்களை நம்பி தொடர்ச்சியாக ரணில் விக்கிரமசிங்கவுடன் பேச்சுக்களுக்கு செல்வதானது முழுமையாக அவரது அரசியல் நலன்களுக்கு முண்டு கொடுப்பதாகவே அமையும்.

அதனைவிடவும், எவ்விதமான நன்மைகளும் தமிழ் மக்கள் அடையப்போவதில்லை. ஆகவே தமிழ் மக்களின் பிரதிநிதிகள் தொடர்ச்சியாகபேச்சுக்குச்செல்வதை எதிர்காலத்தில் முன்னெடுக்க கூடாது என்பதை நாம் பகிரங்கமாக கேட்டுக்கொள்கின்றோம் என்றார்.

## 10 அமைச்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மொஹமட் நஃபீல், பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் மாகாண அலுவல்கள் அமைச்சின் செயலாளராகபி.பி.யசரத்ன,நீர்ப்பாசனஅமைச்சின்செயலாளராகசமன்தர்ஷனபாடிகோராள ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.சுற்றாடல் அமைச்சின் செயலாளராக பி. கே. பி.சந்திரகீர்த்தி, மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சின்செயலாளராககலாநிதிசுலக்ஷன ஜயவர்தன, போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் செயலாளராக பொறியியலாளர் ரஞ்சித் ரூபசிங்க, தொழில்நுட்ப அமைச்சின் செயலாளராக கலாநிதி தர்மசிறி குமாரதுங்க ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

வடமத்தியமாகாணத்தின்பிரதம செயலாளராக ஆர்.எம்.டபிள்யூ.எஸ். சமரதிவாகர மற்றும் மேல் மாகாண பிரதம செயலாளராக எஸ்.எல்.டி.கே.விஜயசிங்க ஆகியோரை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நியமித்துள்ளார்.

## இந்தியத்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்திய - ஐரோப்பிய சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்களை ஏற்படுத்திக்கொள்வதற்கான பேச்சுக்குழுகளிலும் சன்தோஷ் ஜா அங்கம் வகித்துள்ளார்.

இந்திய, இலங்கைக்கு இடையில் காணப்படும் நீண்டகால பொருளாதார, கலாசார மற்றும்சமூக தொடர்புகளைப்பலப்படுத்திக்கொள்ள அர்பணிப்பதாக ஜனாதிபதி மாளிகையில் வைக்கப்பட்டிருந்த விருந்தினர் பதிவேட்டில் சன்தோஷ் ஜா குறிப்பிட்டுள்ளார்.

இந்தியா-இலங்கை வரலாற்று நட்பை மேலும் பலப்படுத்தவும் வர்த்தக,முதலீட்டு,வலுசக்திஉள்ளிட்ட பல துறைகளில் காணப்படும் நெருங்கிய ஒத்துழைப்புக்களை மேம்படுத்திக்கொள்ளவும் அர்ப்பணிப்பதாக புதிய இந்திய உயர்ஸ்தானிகள் தெரிவித்தார்.

இருநாட்டுத் தலைவர்களும் ஏற்றுக்கொண்ட தெரிவுக்கு அமைய செயற்படுவதே தனது எதிர்பார்ப்பாகும் என்றும் இரு நாடுகளினதும் ஒத்துழைப்பு நெருங்கிய நட்பு என்பனவே வலயத்தின் முன்னேற்றம், நிலைப்புத்தன்மைக்கு காரணமாக அமைந்துள்ளது எனவும்நம்பிக்கை தெரிவித்தார்.

சுகாதார மற்றும் தொழிற்சாலைகள் அமைச்சரும் பதில் வெளிவிவகார அமைச்சருமான ரமேஸ் பத்திரன மற்றும் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.




# தரமற்ற மருந்துகள் இறக்குமதி விவகாரம்: சாட்சிகளிருந்தால் ஹெகலிய கைதாவார்

## அமைச்சர் டிரான் அலஸ் திட்டவட்டம்



தரமற்ற மருந்துகள் இறக்குமதி செய்யப்பட்டதாக தெரிவிக்கப்படும் விவகாரம் தொடர்பில் நிரூபிக்கப்பட்ட சாட்சிகள் இருக்குமாயின் முன்னாள் சுகாதார அமைச்சரும் கைது செய்யப்படுவார். எவ்வாறிருப்பினும் இவ்விடயங்களில் தனது தலையீடு எதுவும் இருக்காது என்று பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் -

நான் வழமையாக வேறு அமைச்சுக்கள் தொடர்பில் பேசுவதில்லை. தரமற்ற மருந்துகள் இறக்குமதி செய்யப்பட்டதாகக் முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் குற்றப்புலனாய்வுப்பிரிவு விசாரணைகளை முன்னெடுத்து வருகிறது.

அதற்கமைய அவர்களின் விசாரணைகளில் முன்னாள் சுகாதார அமைச்சரும் தவறிழைத்துள்ளார் என்பதற்கு போதுமான சாட்சிகள் காணப்பட்டால் அவரையும் கைது செய்ய முடியும்.

ஆனால் அதற்கு நிரூபிக்கப்பட்ட சாட்சிகள் இருக்க வேண்டும். ஊடகங்களிலும், அரசியல் கட்சிகளிலும் கூச்சலிடப்படுகின்றது என்பதற்காக அமைச்சரை கைது செய்ய முடியாது. இது தொடர்பில் சிலர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

அதன்பின்னர் செயலாளரையும் கைது செய்ய வேண்டும் என்று ஊடகங்களில் தெரிவிக்கப்பட்டது. சந்தேகத்துக்கிடமான சாட்சிகள் கிடைத்துள்ளமையால் அவர் கைது செய்யப்பட்டுள்ளார். அதேபோன்று சாட்சிகள் கிடைத்தால் அமைச்சரும் கைது செய்யப்படுவார். - என்றார். (05)

# பிரபாகரனின் மகளது என்ற பெயரில் காணொளி வெளியிடடோர் கைதாவர்

## பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவிப்பு

பிரபாகரனின் மகள் எனக் குறிப்பிட்டு பெண்ணொருவர் பேசுவதைப் போன்று காணொளியை வெளியிட்ட நபர்கள் விரைவில் கைது செய்யப்படுவர் என்று பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் -

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரனின் மகள் எனத் தெரிவிக்கப்பட்டு பெண்ணொருவர் பேசுவதைப் போன்று வெளியிடப்பட்ட காணொளி தொடர்பில் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சு அவதானம் செலுத்தியுள்ளது. அதற்கமைய அது தயாரிக்கப்பட்ட ஒரு காணொளி என்பது இனங்காணப்பட்டுள்ளது.

அது தொடர்பில் பயங்கரவாத விசாரணைப்பிரிவு மற்றும் குற்றப்புலனாய்வு பிரிவு என்பன விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றன. இவ்வாறான காணொளிகளை வெளியிடுபவர்களை எவ்வாறேனும் இனங்கண்டு அவர்களை நிச்சயம் கைது செய்வோம். - என்றார். (05)

# நஜீப் ஏ மஜீத் காலமானார்



*சுகவீனமுற்று தனியார் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த முன்னாள் கிழக்கு மாகாண முதலமைச்சர் நஜீப் ஏ மஜீத் நேற்று (வெள்ளிக்கிழமை) காலை உயிரிழந்துள்ளார்.*

*அவர் மறைந்த மர்ஹூம் மஜீத் எம்.பியின் புதல்வர் ஆவார். நஜீப் ஏ மஜீத் கூட்டுறவுத் துறை பிரதியமைச்சராகவும் பதவி வகித்தமை என்பதும் குறிப்பிடத்தக்கது. (05)*



காலைக்கதிர் Kalaikkathir

# நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபையை தொடர்ந்து செயற்படுத்துவதற்குத் தீர்மானம்

அரச மறுஆய்வுக் குழுவால் மூடப்படுவதற்குமுன்மொழியப்பட்ட நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபையின், நிறுவனத்தைத் தொடர்ந்து இயக்க முடிவு செய்துள்ளது.

இது தொடர்பான அமைச்சரவை பத்திரத்திற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைக்கும். பிரதமர் தினேஷ் குணவர்தன மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க ஆகியோரின் கையொப்பமிடப்பட்ட கூட்டு அமைச்சரவை பத்திரமாக அமைச்சரவை பத்திரம் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த நிறுவனத்தை மூடுவது அல்லது நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு மாற்றுவது குறித்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பணவியல் பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கை அமைச்சராக நியமிக்கப்பட்ட பொதுச் செலவுக் குழுவின் அறிக்கையின் மூலம் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான அறிக்கை முன்னதாக அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டு அதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது.

பணவியல், பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூட்டு அமைச்சரவை பத்திரத்துடன் தொடர்புடைய நிறுவனத்தை தொடர்ந்து நடத்துவது தொடர்பான அவதானிப்புகளை சமர்ப்பித்து தனது உடன்பாட்டை வெளிப்படுத்தியுள்ளார்.

நகர அபிவிருத்தி அதிகார சபை மற்றும் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையால்அமுல்படுத்தப்பட்டு வரும் சட்டத்தால் ஒதுக்கப்பட்ட செயற்பாடுகளில் இருந்து நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை விலக வேண்டும் என அமைச்சரவை தீர்மானித்துள்ளது. மேலும், நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் செயலாளருக்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறும் அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

ஐக்கிய நாடுகளின் உலக குடியிருப்பு திட்டத்தில் ஒரு நாட்டின் பங்களிப்புக்காக தொடங்கப்பட வேண்டிய பொறுப்புகளை நிறைவேற்றுவதற்காக நாடாளு மன்றச் சட்டத்தால் நிறுவப்பட்ட ஒரே நிறுவனம் நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையாகும்.

நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை தற்போது நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் கீழ் செயற்படுகிறது.

நகர்ப்புறமாக அறிவிக்கப்பட்ட உள்ளூராட்சி பகுதிகளில் வசிக்கும் குறைந்த வருமானம் பெறும் சமூகத்தினரின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் வகையில், வீட்டுத் தீர்வுகளை வழங்குவதன் மூலம் பல திட்டங்களும் வேலைத்திட்டங்களும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

அதன்படி நாட்டிலுள்ள 341 உள்ளூராட்சிப் பிரிவுகளில்; 273 உள்ளூராட்சிப் பகுதிகள் நகரப் பிரதேசங்களாகப் பிரகடனப்படுத்தப்பட்டு, நகர்ப்புற மக்கள்எதிர்கொள்ளும்சிக்கலானசமூகப் பொருளாதாரப் பிரச்சினைகளுக்கான தீர்வு நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையால் நகர்ப்புறங்களுக்கு ஏற்ப கையாளப்படுகின்றன.

நகர்ப்புற மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் வகையில், அடுத்த நான்கு ஆண்டுகளில் திறைசேரிக்குச் சுமை ஏற்படாத வகையில் பௌதீக அபிவிருத்தித் திட்டங்களைச் செயல்படுத்தி வருமானம் ஈட்டுவதற்கான திட்டங்களை நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை தயாரித்துள்ளது. (05)

# தமிழ் அரசுக் கட்சி தலைமைக்கான................

(4ஆம் பக்கமத் தொடர்ச்சி..)

மூவரில் இளையவர் 1970இல் பிறந்த எஸ்.யோகேஸ்வரன். அவரது தொழில்சமூக சேவையாகும். யோகேஸ்வரன் 2010 மற்றும் 2015 இல் மட்டக்களப்பு மாவட்டத்தில் இருந்து நாடாளுமன்றத்திற்குத் தெரிவு செய்யப்பட்டார். அவர் 2020 தேர்தலிலும் போட்டியிட்டார் ஆனால் தோல்வியடைந்தார்.

ஒரு கட்சியின் தலைவரைத் தேர்ந்தெடுப்பதற்கு தமிழ் அரசுக் கட்சிக்கு நியமன நடைமுறையுள்ளது, மத்திய செயற்குழுவில் குறைந்தபட்சம் ஆறு உறுப்பினர்கள் வருங்கால வேட்பாளரின் ஒப்புதலுடன் ஒரு பெயரை முன்மொழிய வேண்டும். ஒரே ஒரு வேட்பாளர் இருந்தால், வெளிப்படையாகத் தேர்தல் இருக்காது. இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட வேட்பாளர்கள் இருந்தால், போட்டியாளர்கள் ஒருவரைத் தேர்தெதடுக்கும் வரை அல்லது போட்டியிலிருந்து வெளியேறாத வரை போட்டி இருக்கும்.

### தேர்தல்

ஒரு தேர்தல் நடந்தால், தமிழ் அரசுக் கட்சியின் பொதுக்குழு உறுப்பினர்கள் மற்றும் மத்திய செயற்குழு உறுப்பினர்கள் வாக்களிக்கத் தகுதியுடையவர்கள். கட்சியின் மதிய செயல் குழு அல்லது மத்திய செயற்குழு 50 உறுப்பினர்களைக் கொண்டுள்ளது. பொதுச் சபை அல்லது பொதுக்குழு 225 உறுப்பினர்களைக் கொண்டுள்ளது. இவர்கள்தான் தலைவரைத் தேர்ந்தெடுக்கும் வாக்காளர்கள். இவர்கள் வாக்களித்து புதிய கட்சித் தலைவரைத் தேர்ந்தெடுப்பார்கள். அதன்பிறகு, தேர்ந்தெடுக்கப்பட்ட கட்சித் தலைவர் கட்சி மாநாட்டில் ஒருமனதாக அங்கீகரிக்கப்படுவார்.

மத்திய குழுவில் மாவட்ட அளவில் பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் மற்றும் சிறப்பு நலன்களை பிரதிநிதித்துவப்படுத்த கட்சி தலைமையால் நியமிக்கப்பட்டவர்கள் உள்ளனர். பொதுக்குழுவில் கட்சியின் மூலக் கிளைகளை(கோட்டம்)பிரதிநிதித்துவப்படுத்தும் உறுப்பினர்கள் இருப்பர். வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள எட்டு மாவட்டங்களில்கட்சிக்கு44மண்டலகிளைகள் உள்ளன. கொழும்பிலும் ஒன்று இருக்கிறது. ஒவ்வொரு கிளையிலிருந்தும் ஐந்து பிரதிநிதிகள் பொதுக் குழுவிற்கு அனுப்பப்படுவார்கள். இதனால்பொதுக்குழுவில்225உறுப்பினர்கள் இருப்பர்.

### நியமனங்கள்

நவம்பர் 30, 2023 அன்று வேட்புமனு தாக்கல் முடிவடைந்தபோது, சுமந்திரன் மற்றும் சிறீதரன் ஆகிய இரு வேட்பாளர்கள் மட்டுமே களத்தில் இருந்தனர். அதற்கான அறிவிப்பு வெளியிடப்பட்டது. ஆனால், நவம்பர் 30, இறுதி நாளில் பதிவு செய்யப்பட்டு, தபால் மூலம் அனுப்பப்பட்ட மூன்றாவது விண்ணப்பம் இரண்டு நாட்களுக்குப் பிறகே கட்சியின் பதில் செயலாளரான மருத்துவர் பி.சத்தியலிங்கத்திடம் சேர்ந்தது. இது யோகேஸ்வரன் சார்பாக மட்டக்களப்பில் இருந்து அனுப்பப்பட்டது. இதனால் யாழ். நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இடையிலான நேரடிப் போட்டிக்குப் பதிலாக முக்கோணப் போட்டியாக அது மாறியது.

குறைந்தபட்சம் ஆறு மத்திய குழு உறுப்பினர்கள் இணைந்து ஒரு வேட்பாளரை பரிந்துரைக்க முடியும் என்றாலும், சுமந்திரனது வேட்புமனுவை ஒரு டஜன் பேர் ஆதரித்தனர். யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த நான்கு பேரும், கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு, வவுனியா, அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை மற்றும் கொழும்பு ஆகிய மாவட்டங்களில் இருந்து தலா ஒருவரும் இதில் அடங்குவர். சுமந்திரனின் பெயரை முன்மொழிந்தவர்களில் மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் இராசமாணிக்கம், கட்சியின் நிர்வாகச் செயலாளர் சேவியர் குலநாயகம் மற்றும் மூத்த உப தலைவரும் வடமாகாண சபை அவைத்தலைவருமான சி.வி.கே.சிவஞானம் ஆகியோரும் அடங்குவர்.

சிறீதரனைப் பொறுத்தமட்டில், அவர் யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர். எனினும்அ அவரது அரசியல் கோட்டை கிளிநொச்சி மாவட்டம். கிளிநொச்சி தனியான நிர்வாக மாவட்டமாக இருந்தாலும், அது யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தின் ஒரு பகுதியாகும். கடந்த தேர்தல்களில் கிளிநொச்சியில் இருந்தே சிறீதரனுக்கு அதிக விருப்பு வாக்குகள் கிடைத்தன. அந்த வகையில் அவர் முன்னாள் வடமாகாண அமைச்சர் குருகுலராஜா மற்றும் கரைச்சி பிரதேச சபையின் முன்னாள் தலைவர் வேலமாலிகிதன் உட்பட கிளிநொச்சியிலிருந்த ஆறு பேரால் பரிந்துரைக்கப்பட்டார்.

சீனித்தம்பி யோகேஸ்வரனும் மட்டக்களப்பு மாவட்டத்தில் இருந்து ஆறு பேரால் பரிந்துரைக்கப்பட்டார். இதில் மட்டக்களப்பு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அரியநேந்திரனும் ஒருவர். யோகேஸ்வரனின் வேட்புமனு உண்மையில் ஆச்சரியத்தை ஏற்படுத்தியது. சுமந்திரன் மற்றும் சிறீதரன் ஆகியோர் சாத்தியமான போட்டியாளர்கள் என்ற ஊகங்கள் எப்பொழுதும் இருந்தபோதிலும், யோகேஸ்வரனின் பெயர் முன்னர் ஒருபோதும் அடிபட்டதில்லை. இப்போதும்கூட, வாக்களிப்புத் தினத்துக்கு முன்னதாக யோகேஸ்வரனைப் போட்டியிடுவதில் இருந்து விலகிக்கொள்ளும் நிலை ஏற்படலாம் என்று சிலர் கருதுகின்றனர்.

### சுமந்திரன் - சிறீதரன் சண்டை

யோகேஸ்வரன் வெளியேறாவிட்டாலும், தமிழ் அரசுக் கட்சித் தலைமைக்கான தேர்தல் சுமந்திரனுக்கும் சிறீதரனுக்கும் இடையிலான பலப்பரீட்சையாக மாறும் என்றே தோன்றுகிறது. தமிழ் அரசுக் கட்சிச் செயற்குழு மற்றும் பொதுக்குழு உறுப்பினர்களைச் சந்திப்பதன் மூலம் இருவரும் குறைந்த தீவிரம் கொண்ட பரப்புரைகளைத் தொடங்கியுள்ளதாகச் செய்தி அறிக்கைகள் குறிப்பிடுகின்றன. இதற்கிடையில், இரு போட்டியாளர்களின் ஆதரவாளர்களும் அனுதாபிகளும் சமூக ஊடகங்களில் தங்களுக்குப் பிடித்தவர்களின் தகுதிகள் மற்றும் நற்பண்புகளைப் பரப்பி வருகின்றார்கள்.

உத்தியோகபூர்வ அல்லது அதிகாரப்பூர்வ மற்ற பரப்புரைகள் இதுவரையில் குறைந்த மட்டத்திற்கு இறங்கவில்லை. இன்னும் அந்த நிலைக்கு இறங்கவில்லை என்றும் சொல்லிக்கொள்ளலாம். ஆனால் 2024 விடியலுக்குப் பிறகு பரப்புரைகள் வேகமெடுக்கத் தொடங்கும் என்பதால் மோசமான பரப்புரைகள், சேறடிப்புக்கள், மலின அரசியல் என்பன தலைதூக்கும் சாத்தியக்கூறுகளை நிராகரிக்க முடியாது.

தமிழ் அரசுக் கட்சியின் பழைய காலக்காரர்கள் மற்றும் முக்கியஸ்தர்கள் மற்றும் தமிழ் அரசியலில் அக்கறையுள்ள பார்வையாளர்கள் கவலைப்படுவது அத்தகைய மோசமான ஒரு பரப்புரை கட்சியைப் பிளவுபடுத்தி அதனை இன்னும் பலவீனப்படுத்திவிடுமோ என்பதைத்தான். இப்படியான சண்டை, கட்சிக் கட்டமைப்பைக் கிழித்து, கடுமையான விரிசலை ஏற்படுத்தும் என்று அஞ்சப்படுகிறது.

தோல்வியடைந்தவர் தேர்தலுக்குப் பிறகு வெற்றியாளருடன் இணைந்து பணியாற்றத் தயாராக இருக்கிறார் என்று இப்போது கூறினாலும், கசப்பான, தடையில்லாத சண்டைக்குப் பிறகு ஒருவர் மற்றவருடன் இணைந்து பணியாற்ற முடியாது என்பதே யதார்த்தம். தலைவர்கள் ஒருவேளை அதற்குத் தயாராக இருந்தாலும் அவர்களது ஆதரவாளர்கள் அதற்குச் சாதகமாக இல்லாமல் இருக்கலாம். அதுமட்டுமின்றி, இந்த நாட்டின் தமிழ் அரசியலின் வரலாறு, கருத்தியல் வேறுபாடுகளாகக் காட்டிலும் ஈகோ மோதல்களின் தொடர்ச்சியாகவே இருந்திருக்கிறது என்பதையும் நாம் மறந்துவிடக்கூடாது.

இலங்கை தமிழ் தேசியவாத அரசியலின் முக்கிய அம்சம் வடக்கு மற்றும் கிழக்கில் இருந்து ஓர் அரசியல் கட்சி கணிசமான தொகுதிகளில் வெற்றிபெறுவதே. கொழும்பு அரசியலில் செல்வாக்குச் செலுத்தவும் தமிழர்களுக்கான தீர்வுகளைக் கொழும்பிடமிருந்து அழுத்தத்தின் மூலம் பெறுவதற்கும் உதவியது. கொழும்பு ஆட்சிகளை உருவாக்கவோ அல்லது கவிழ்க்கவோ கூட அது உதவியது. எனவே அத்தகைய ஒரு கட்சிக்குள் ஏற்படும் உடைவு, பிளவு தமிழ் இனத்தின் இருப்புக்கே ஆபத்தாக முடியக்கூடும்.

### துண்டாக்கும்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் அண்மைய முறிவும், எந்தத் தமிழ்க் கட்சியும் மக்களின் அமோக ஆதரவைப் பெறாமல் கிடைமட்டமாகவும் செங்குத்தாகவும் துண்டு துண்டாக இருப்பதும், அடுத்த நாடாளுமன்றத்தில் எந்த ஒரு தமிழ்க் கட்சியும் பெரும்பான்மை ஆசனங்களைக் கைப்பற்ற முடியாத நிலைமையை ஏற்படுத்தும் என்று உணரப்படுகின்றது. தமிழ் அரசுக் கட்சிக்குள் எழுந்துள்ள தலைமைக்கான மோதல் இந்த நிலையை இன்னும் மோசமாக்கும். கட்சியை இழப்பது மட்டுமல்லாது தமிழர்களின் பேரம்பேசும் அரசியலையும் அது சிதைக்கும்.

சுமந்திரன் - சிறீதரன் தலைமைத்துவ மோதலின் விளைவாக கட்சி உடைந்து இரு பிரிவுகளானால் விளைவுகள் கடுமையாக இருக்கும். ஒரு சமரசத்திற்கு வர போட்டியாளர்கள் இணங்கினால் அல்லது தேர்தல் நிராகரிக்கப்பட்டால் சாத்தியமான பிளவின் பேரழிவை சிறந்த முறையில் தவிர்க்கலாம் அல்லது மோசமான நிலையில் ஒத்திவைக்கலாம்.

### புறம்பான தலையீடு

தமிழ் அரசுக் கட்சியின் தலைமைக்கான தேர்தல் நடைபெறும் போது மற்றொரு சாத்தியமான ஆபத்தும் உண்டு. அது வெளியிலிருந்தான தலையீடு. இந்தக் கட்சியின் தலைவராக யார் வரவேண்டும் என்று விரும்பும் எதிர்த் தரப்பினரும் அரசியல் எதிரிகளும் தேர்தல் முடிவுகளில் செல்வாக்குச் செலுத்த முயற்சிக்கக்கூடும். இதற்கு மூன்று சாத்தியங்கள் உள்ளன. புலம்பெயர் தமிழர்களின் கூறுகள், இந்தியாவில் இருக்கும் கூறுகள் மற்றும் இலங்கையின் ஆழமான பிரதேசவாதக் கூறுகள். இந்த தருணத்தில் இந்த அம்சங்களைப் பற்றி மேலும் விவரிக்க விரும்பவில்லை, ஆனால் எதிர்காலத்தில் தேவைப்பட்டால் அவ்வாறு செய்வேன்.

ஏற்கனவே கூறியது போல் தேர்தல் பரப்புரை இப்போதுதான் தொடங்கி இருக்கிறது. இன்னும் சூடு பிடிக்கவில்லை. கட்சியின் தலைமைப் போட்டி பற்றிய நுண்ணறிவைப் பெற வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள பல தமிழ் ஊடகவியலாளர்களுடன் நான் உரையாடினேன். இந்த ஊடகவியலாளர் வட்டாரங்களின்படி, சுமந்திரன் மிகக் குறைந்த பெரும்பான்மையுடன் வெற்றி பெறுவார் என எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால் பரப்புரை தீவிரமடையும்போது நிலைமை மாறலாம். எனவே நல்ல எண்ணம் கொண்ட கட்சிப் பிரமுகர்கள் மற்றும் நலன் விரும்பிகள் இப்போதே தலையிட்டு கொண்டு வருவது விவேகமானது மற்றும் எளிதானது

### ஒரு சமரசம் பற்றி

சம்பந்தன், மாவை சேனாதிராஜா, சி.வி.கே.சிவஞானம், குருகுலராஜா போன்ற மூத்தவர்கள் மற்றும் சட்டத்தரணி, கே.கனகஈஸ்வரன், கல்விமான் நிர்மலா சந்திரஹாசன் போன்ற வெளிநாட்டு நலன் விரும்பிகள் மற்றும் சில செல்வாக்கு மிக்க பத்திரிகை ஆசிரியர்கள் ஆகியோர் இந்த விடயத்தை நேர்மறையாகச் செயல்படக்கூடியவர்களாக நான் நினைகிறேன். மற்றும் இது சம்பந்தமாக ஆக்கபூர்வமாக. அவர்கள் முன்முயற்சி எடுப்பார்கள் என்றும், போட்டியாளர்களும் அவர்களின் ஆதரவாளர்களும் கட்சியனதும் மற்றும் நீண்டகாலமாக அவதிப்படும் தமிழ் மக்களினதும் நலன்களை முன்னிறுத்திச் செயல்படுவார்கள் என்றும் நான் நம்புகிறேன்.

### பிரிக்கப்பட்ட நாம் வீழ்ச்சி

சுமந்திரனுக்கும் சிறீதரனுக்கும் இடையில் ஒரு சமரசம் சாத்தியமற்றது என்று நினைக்கும் மக்கள் உள்ளனர். அவர்கள் கருத்துச் சரியாக இருக்கலாம். ஆனால் சமரச முயற்சியால் எதுவும் இழக்கப்படுவதில்லை. எல்லாவற்றிற்கும் மேலாக, 2020 நாடாளுமன்றத் தேர்தலில் சுமந்திரனும் சிறீதரனும் ஒரு அணியாகச் செயல்பட்டு கூட்டுப் பரப்புரைய மேற்கொண்டனர் என்பதை மறந்துவிடக்கூடாது. அதனால்தான் அவர்கள் இருவர் மட்டுமே யாழ்ப்பாணத்தில் வெற்றி பெற்றனர் என்பதும் உண்மை. அதை மறந்துவிடக்கூடாது.

# இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தேசிய மாநாடும் புதிய தலைவர் தெரிவும் திட்டமிட்டபடி இடம்பெறும்

## அறுதியிட்டுக் கூறுகிறார் சீ.வி.கே சிவஞானம்

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தேசிய மாநாடும், புதிய தலைவர் தெரிவும் திட்டமிட்டபடி நடைபெறும் என்று கட்சியின் சிரேஷ்ட தலைவரும், வடக்கு மாகாண அவைத்தலைவருமான சீ.வி.கே. சிவஞானம் தெரிவித்தார்.

தமிழரசுக் கட்சியின் புதிய தலைவர் தெரிவு தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவித்தவை வருமாறு -

கடந்த18ஆம்திகதிஇளங்களுடையகட்சியின் அரசியல் குழுக் கூட்டம் நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து கட்சியின் பொதுச் சபைக் கூட்டமும் புதிய தலைவர் உள்ளிட்ட நிர்வாகத் தெரிவும் இடம்பெற இருக்கின்றன.

எந்தக் காரணம் கொண்டும் கட்சிக்கான புதிய தலைவர் தெரிவு அல்லது பொதுச் சபைக் கூட்டம் ஒத்திவைக்கின்ற எண்ணத்தில் கடந்த கூட்டத்தில் கலந்துகொண்டவர்களில் பெரும்பாலானவர்கள் இல்லை.

ஆகவே, தெரிவு என்பதில் தெளிவாகவே நாங்கள் இருக்கின்றோம். மாற்று எண்ணத்திலும் எவரும் இல்லை.

தேசிய மாநாட்டுக் கூட்டத்தைக் குறிப்பிட்ட திகதியில் நடத்த வேண்டும் என்ற எண்ணத்தில்தான் சகலரும் உறுதியாக இருக்கின்றனர்.

ஆகையினால், திட்டமிட்டபடி நிச்சயமாக இந்தக் கூட்டம் நடைபெறும். அதில் எந்தச் சந்தேகமும் இல்லை. அதில் தலைவர் தெரிவும் நடைபெறும்.

அந்தத் தெரிவில் போட்டி இருக்குமா, இல்லையா என்பது குறித்து எல்லாம் எனக்குச் சொல்லத் தெரியவில்லை. ஆனால், நிச்சயமாகத் தலைவர் உள்ளிட்ட நிர்வாகத் தெரிவு நடக்கும். இவை நடைபெறும் வாய்ப்புக்கள் 90 வீதம் இருக்கின்றன.

எனினும், வேறு ஏதும் தேசிய பிரச்சினை, அல்லாவிடின் சூறாவளி அல்லது சுனாமி அடித்தால் ஒன்றும் செய்ய முடியாது. எனவே, கூட்டமும் தெரிவுகளும் அறிவிக்கப்பட்டபடி நிச்சயம் நடைபெறும். - என்றார். (05)



# இரட்டை குழந்தைகளை பெற்ற தாய் 9 நாள்களில் தலைமறைவு

இரட்டை குழந்தைகளை பெற்ற தாய் குழந்தைகள் பிறந்து ஒன்பது நாள்களில் கடிதம் எழுதி தப்பிச்சென்றுள்ளார் எனப்பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு தப்பிச் சென்றவர் காலி, அஹூங்கல்ல பிரதேசத்தை சேர்ந்த 29 வயதுடைய பெண்ணாவார்.

இவர் திருமணமாகி 6 வருடங்களுக்கு பின்னரே இந்தக் குழந்தைகளை பெற்றெடுத்துள்ளார்.

இரட்டை குழந்தைகளை பெற்றெடுத்ததால் உடல் பலவீனமடைந்த நிலையில் சில நாள்களாக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு அண்மையில் வீடு திரும்பியுள்ளார்.

இவர்வீட்டைவிட்டுதப்பிச்செல்லும் போது கையடக்கத் தொலைபேசியை மாத்திரமேஎடுத்துச்சென்றுள்ளார்என விசாரணையில் தெரியவந்துள்ளது.

குறித்த கடிதத்தில் தன்னால் இந்த வலியை தாங்கிக் கொள்ள முடியாது எனவும் தான் வீட்டை விட்டுசெல்வதாகவும் குழந்தைகளை பாதுகாப்பாக பராமரிக்குமாறும் கூறியுள்ளார்.

இரட்டை குழந்தைகளை பராமரிக்க தாய் அவசியம் என்பதால் இவர் தொடர்பில் தகவல் கிடைத்தால் உடனடியாக தெரிவிக்குமாறு பொலிஸார் பொதுமக்களிடம் கேட்டுக் கொண்டுள்ளனர். (05)

# அஸ்வெசும நலன்புரி திட்டத்துக்காக 51,967 மி.ரூபா செலவிடப்பட்டுள்ளது

## நிதி இராஜாங்க அமைச்சர் தகவல்

அஸ்வெசும நலன்புரி திட்டத்துக்கமையபயனாளர்களுக்கு கொடுப்பனவுகளை வழங்கு-வதற்கு நிறைவமைந்த ஐந்து மாதகாலப்பகுதியில் மாத்திரம் 51,967 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது. இரண்டாம் கட்டத்துக்கான விண்ணப்பம் அடுத்தமாதம்கோரப்படும்எனநிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு -

அஸ்வெசும நலன்புரி திட்டத்துக்கமைய 14,10064 குடும்பங்களைச் சேர்ந்த பயனாளர்களுக்கு டிசெம்பர் மாதத்துக்கானகொடுப்பனவுகளை வழங்க உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்கமைய டிசெம்பர் மாதத்துக்கான கொடுப்பனவுகளுக்காக 8793 மில்லியன் ரூபா வங்கி கணக்குகளில் வைப்பிலிடப்பட்டுள்ளன.

அஸ்வெசும நலன்புரித் திட்டத்துக்கமைய கடந்த ஜூலை மாதம் முதல் டிசெம்பர் மாதம் வரையான காலப்பகுதியில் மாத்திரம் நலன்புரி கொடுப்பனவுகளுக்காக 51,967 மில்லியன் ரூபாவை அரசாங்கம் செலவழித்துள்ளது.

அதி தீவிர ஏழ்மை நிலையில் உள்ள 303199 குடும்பங்களுக்கும், ஏழ்மை நிலையில் உள்ள 606496 குடும்பங்களுக்கும், ஏழ்மை அவதான நிலையில் உள்ள 290624 குடும்பங்களுக்கும், 209748 இடைநிலை குடும்பங்களுக்கும் இதுவரையான காலப்பகுதியில் நலன்புரி கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ளன. - என்றார். (05)



# பொலிஸாரின் நடவடிக்கைகள் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும் உரிமை கிடையாது

## பதில் பொலிஸ் மா அதிபர் தென்னக்கோன் காட்டம்

நாட்டிலிருந்து போதைப்பொருளை முற்றாக ஒழிக்கும் வேலைத்திட்டமே தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளது. இதுவரை கைது செய்யப்பட்டவர்களில் 4 ஆயிரம் பேர் பாடசாலை மாணவர்களுக்கு போதைப்பொருளை விற்பனை செய்துள்ளனர்.

இந்த சிறந்த செயற்பாட்டுக்கு எதிராக கருத்து தெரிவிப்பவர்களுக்கு எந்தவொரு உரிமையும் கிடையாது. பாதாளக்குழு செயற்பாடுகளையும் போதைப்பொருள் பாவனையையும் முற்றாக அழிப்பதற்கு நாட்டுமக்கள் பூரண ஒத்துழைப்பைவழங்க வேண்டும் என பதில் பொலிஸ் மா அதிபர் தேபந்து தென்னகோன் தெரிவித்துள்ளார்.

கொழும்பு வடக்கு சமூக பொலிஸ் குழு ஏற்பாடு செய்திருந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர்மேலும்குறிப்பிட்டவைவருமாறு-



உங்களின் குடும்பங்களை இல்லாமல் ஒழிக்கும் போதைப்பொருளை முற்றாக அழிக்கும் வேலைத்திட்டமே இதுவாகும். நாட்டின் அனைத்து பகுதிகளிலும் பரவியுள்ள போதைப்பொருள், நகரங்கள் முதல் சிறு பிரதேசங்கள் வரையில் பரவியுள்ளது. அவற்றை முற்றாக சமூகத்தில் இருந்து அழிக்க வேண்டும். எனவே இந்த சிறந்த செயற்பாட்டுக்கு எதிராகக் கருத்துத் தெரிவிப்பவர்களுக்கு எந்தவொரு உரிமையும் கிடையாது. பாதாளக்குழு செயற்பாடுகளையும் போதைப்பொருள் பாவனையையும் முற்றாக அழிப்பதற்கு நாட்டு மக்கள் அனைவரும் பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும். அதற்காக சிறந்த திட்டங்களை செயற்படுத்தியுள்ளோம். எதிர் காலத்திலும் செயற்படுத்துவோம்.

சில பிரதேசங்களுக்கு போதைப் பொருளை விற்பனை செய்வது யாரென்பது குற்றப்புலனாய்வு பிரிவினர் எமக்கு அறிவித்துள்ளனர். எமது நாட்டில் உற்பத்தி செய்யப்படாத மற்றும் வெளிநாட்டிலிருந்து இறக்குமதிசெய்யப்பட்டபோதைப்பொருள்கள் உங்களது குழந்தைகளின் எதிர்காலத்தை சீர்குலைக்கின்றது.

இந்த பொலிஸ் விசேட சுற்றிவளைப்பு போதைப் பொருள்களை இறக்குமதி செய்யும் தரப்பினரை இலக்கு வைத்தே மேற்கொள்கிறோம். மேற்கொள்ளப்பட்டுள்ள ஒவ்வொரு சுற்றிவளைப்புகளின் போதும் மிக முக்கிய குற்றவாளிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுள் போதைப்பொருள் விற்பனை செய்யும் தரப்பினரும் உள்ளடங்கியுள்ளனர். கைது செய்யப்பட்டவர்களில் 4 ஆயிரம்பேர் பாடசாலை மாணவர்களுக்கு போதை பொருளை விற்பனை செய்துள்ளனர். இவர்களைக் கைதுசெய்து அவர்களிடமிருக்கும் சொத்துக்களையும் கைப்பற்றும் வேலைத் திட்டமும் முன்னெடுக்கப்பட்டுள்ளது. – என்றார். (05)

# அரசியல்வாதிகளின் சட்டவிரோத உத்தரவுகளை அரச அதிகாரிகள் என்றும் செயற்படுத்தக்கூடாது

## நீதி அமைச்சர் விஜேதாஸ உத்தரவு



அரசியல்வாதிகள் உத்தரவிடும் பிழையான கட்டளைகளை அரச அதிகாரிகள் செயற்படுத்தக் கூடாது. அது தொடர்பான சட்டநிலைமையை தெளிவுபடுத்துவது அதிகாரிகளின் பொறுப்பாகும் என நீதி அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ தெவித்தார்.

நாடாளுமன்ற பணியாளர்கள் குழு அதிகாரிகளுக்கு கொழும்பு மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற பயிற்சி பட்டறையில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் –

பிரதேச சபை, மாகாண சபை உறுப்பினர்கள் வீதிகளை புனரமைத்தல், வீதி விளக்குகளை பொருத்துதல் மற்றும் மரண வீடுகள் திருமண வீடுகளுக்கும் செல்வார்கள்.

ஆனால் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருப்பது இந்த வேலையை செய்வதற்கு என்றே மக்கள் நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். ஜேஆர் ஜயவர்த்தன காலத்தில் இருந்தே இந்த நிலை ஏற்பட்டது.

அந்த காலத்தில் இருந்து அவர்களுக்கு நிதி ஒதுக்கீடு வழங்கி வந்தது. நாடாளுமன்ற உறுப்பினர்கள் தேசிய மட்டத்திலேயே இருந்தனர். நாடாளுமன்ற உறுப்பினர்கள் எங்களுக்காக செயற்படுகின்றனர்.

எங்களுக்காக சட்டம் இயற்றி வருவதாகவே ஆரம்பத்தில் மக்கள் நினைத்துக்கொண்டிருந்தனர். அவ்வாறு தேசிய மட்டத்தில் இருந்த மக்கள் பிரதிநிதிகளை தலைகீழாக மாற்றிவிட்டார்கள்.

தற்போதுநாடாளுமன்றஉறுப்பினர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள் என அனைவரும் வீதி புனர்நிர்மாணம் செய்கிறார்கள். நிதி ஒதுக்கீட்டை பெற மக்கள்பிரதிநிதிகள் விரும்புகின்றனர். இந்த முறைமையால் நாடு அழிவடைந்துள்ளது.

அத்துடன் நாடாளுமன்றம் நாட்டுக்காக தீர்மானங்களை எடுக்கவில்லை. மாறாக நாடாளுமன்றம் கட்சிக்காகவும் தலைவருக்காகவும்கட்சியைபாதுகாக்கவும் தீர்மானங்களை மேற்கொண்டன.

அதனால் நாடு அழிவடைந்தது. ஆட்சியாளர்களுக்கு நாட்டைவிட்டு செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது. போராட்டம் இடம்பெற்றது. மக்களதும் எமதும் என இந்த இரண்டு தரப்பினரின் பிழை காரணமாக இவை ஏற்பட்டன.

மக்களுக்கு இதனைப்பழக்கியது யார்? நாங்கள் என்னதான் சட்ட திட்டங்களை கொணடுவந்தாலும் ஜனநாயகத்தை பாதுகாக்க முடியாது. ஜனநாயகத்தைப் பாதுகாப்பதாக இருந்தால் நம்பிக்கை முக்கியமானது. நம்பிக்கையை பாதுகாத்துக்கொள்ள அனைவரும் தெரிந்துகொள்ள வேண்டும்.

ஏனெனில் நம்பிக்கையை பாதுகாக்காவிட்டால் முறைமைகள் சீர் குலைந்துவிடும். முறைமைகள் சீர் குலைந்துவிட்டால் எமது வாழ்க்கைக்கு பாதுகாப்பு இல்லை. உத்தரவாதம் இல்லை. இது நாட்டுக்கு ஏற்படக்கூடிய மிகவும் மோசமான விடயமாகும். அதனால் நம்பிக்கையைக் கட்டியெழுப்ப நாடாளுமன்றம் நடவடிக்கை எடுக்க வேண்டும். அதிகமாக குற்றச்சாட்டுக்கள் இருப்பது நாடாளுமன்றத்துக்காகும்.

மேலும் சுகாதார அமைச்சில் மருந்து மோசடி ஒன்று இடம்பெற்றிருக்கிறது. இமியுனொங்லாஹிபியுலின் மருந்து என வேறு ஒரு மருந்தை கொண்டுவந்திருப்பதாகக் குற்றச்சாட்டு தெரிவிக்கப்படுகிறது.

அதுஇன்சியுலின்எனநோயாளர்களுக்கு வழங்கியும் இருக்கிறது. அப்படியானால் இந்த குற்றத்தை யார் செய்தார்கள்? அரச அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்டதா அரசியல்வாதிகள்மேற்கொண்டார்களா என நீதிமன்றம் தேடுகிறது. இந்த முறைமை இவ்வாறு செல்லும்போது மக்கள் விரக்தியடைவார்கள். அதனால் இந்த முறைமையை சரி செய்துகொள்ள வேண்டும்.

அதனால் நான் எனது அதிகாரிகளுக்கு தெரிவிப்பது, நான் உத்தரவிட்டாலும் அது பிழையான விடயம் என்றால் அதனை செய்ய வேண்டாம். நான் விடுக்கும் உத்தரவு சட்டவிரோதம் என்றால் அதனை செயற்படுத்திய பின்னர் எனக்கு சொல்ல வேண்டாம்.

நான் யாரையும் பாதுகாக்கப்போவதில்லை என்பதை தெரிவித்திருக்கிறேன். அதனால்அதிகாரிகள்சரியானவிடயங்களை மாத்திரம் செய்யவேண்டும். பிழையான உத்தரவொன்றை வழங்குமாக இருந்தால் அதன் சட்ட நிலைமை தொடர்பாகத் தெளிவுபடுத்துவது அதிகாரிகளுக்குரிய பொறுப்பாகும்.–என்றார். (05)

# அரசியல் ஸ்திரத்தன்மை வரிக்கொள்கை பாதிக்கும்

## உதய கம்மன்பில சுட்டிக்காட்டு

2023 ஆண்டை காட்டிலும் 2024 ஆம் ஆண்டு பிரச்சினைகள் தீவிரமடையும். அரசாங்கத்தில் வரி கொள்கை அரசியல் ஸ்தீரத்தை பலவீனப்படுத்தும். மக்கள் போராட்டங்கள் தலைதூக்கும் என பிவிதுரு ஹெல உறுமய கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள இலங்கை மன்றக் கல்லூரியில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டதன்பின்னர்ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் –

ஜனாதிபதியின் கட்டளைகளுக்கு அமையவே பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்கள் செயற்படுகிறார்கள்.வரி தொடர்பில் அவர் எடுக்கும் தீர்மானங்கள்அனைத்துக்கும் கண்களை மூடிக் கொண்டு ஆதரவு வழங்கி விட்டு வரி அதிகரிப்புக்கு நாங்கள் எதிர்ப்பு என்று மக்கள் மத்தியில் குறிப்பிடுகிறார்கள்.



வரி அதிகரிப்பைத் தவிர எவ்வித திட்டங்களையும் ஜனாதிபதி செயற்படுத்தவில்லை. வெளிநாட்டு கையிருப்பு பற்றாக்குறையால் தான் நாடு வங்குரோத்து நிலையடைந்தது. ஆனால் வெளிநாட்டு கையிருப்பை அதிகரித்துக் கொள்ள நடைமுறைக்கு சாத்தியமான செயற்திட்டங்கள்செயற்படுத்தப்படவில்லை.

முறையற்ற வகையில் வற் வரி உட்பட சகல வரிகளும் அதிகரிக்கப்பட்டுள்ளன. 2023 ஆம் ஆண்டை காட்டிலும் அடுத்த ஆண்டில் பிரச்சினைகள் தீவிரமடையும். வரி கொள்கை நாட்டின் அரசியல் ஸ்திரத்தன்மையை கேள்விக்குள்ளாக்கும்.மக்கள் போராட்டங்கள் மீண்டும் தலைதூக்கும்.

பொருளாதார மீட்சிக்காக அரசாங்கம் எடுக்கும் சகல தீர்மானங்களும் நாட்டு மக்களை நெருக்கடிக்குள்ளாக்கியுள்ளது.வரி கொள்கை அடுத்த ஆண்டு அரசியல் ரீதியிலும் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தும். – என்றார். (05)

# முஸம்மில் எம்.பியின் பாதுகாப்புப் பிரிவு சார்ஜன்டின் துப்பாக்கி, தோட்டா திருட்டு

புறக்கோட்டை ஒல்கொட் மாவத்தையில் பஸ் நிலைய வேலிக்கு அருகில் உறங்கிக்கொண்டிருந்த பொலிஸ் சார்ஜன்ட் ஒருவரின் பயணப் பையை திருடியதாக சந்தேகிக்கப்படும் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பாதிக்கப்பட்ட பொலிஸ் சார்ஜன்ட் நாடாளுமன்ற உறுப்பினர் முஸம்மில் பாதுகாப்பு பிரிவில் கடமையாற்றுபவராவார்.

விசாரணையில் கைத்துப்பாக்கி , தோட்டாக்கள், பொலிஸ் உடைகள் , அமைச்சரவை பாதுகாப்பு பிரிவின்உடை, உத்தியோகபூர்வஅடையாளஅட்டை மற்றும் மேலும் சில பொருள்கள் கிருலப்பனை பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின் போது சந்தேகத்திற்கிடமான முறையில் காணப்பட்ட நபரிடத்தில் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் இப் பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர் (05)

# பாடசாலை விளையாட்டு ஆலோசகரின் மனைவி போதைப்பொருளுடன் கைது

கண்டி-தவுலகல பிரதேசத்தில் உள்ள பாடசாலை ஒன்றின் விளையாட்டு ஆலோசகரது மனைவி குஷ் போதைப்பொருளுடன் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரிடத்திலிருந்து 90 கிராம் நிறையுடைய குஷ் போதைப்பொருள் மற்றும் 28 போதை மாத்திரைகள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை தவுலகல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# நுவரெலியாவில் ஆசிரியர் கைது

நுவரெலியா மாவட்டத்தில் உள்ள பாடசாலை ஒன்றில் கல்வி கற்கும் மூன்று மாணவிகளை பாடசாலையின் ஆய்வு கூடத்தில் வைத்து துஷ்பிரயோகம் செய்தார் என்ற சந்தேகத்தில் அதே பாடசாலையின் ஆசிரியர் ஒருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

கிதுல்லே பல்லேதோவ பிரதேசத்தில் வசிக்கும் 29 வயதுடைய திருமணமான ஆசிரியர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த ஆசிரியர் மாணவி ஒருவருடன் காதல் உறவில் ஈடுபட்டுள்ளதுடன், அந்த மாணவியின் ஊடாக ஏனைய மாணவிகளும் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாகியுள்ளனர் என ஆரம்பக் கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (05)

# இலங்கைப் போரில் கற்ற பாடங்களை நினைவுகூர்ந்தார் யுனிசெப் பேச்சாளர்

காஸாவின் தற்போதைய நிலைவரம் குறித்துக் கருத்து வெளியிட்டிருக்கும் யுனிசெப் அமைப்பின் பேச்சாளர் ஜேம்ஸ்எல்டர், இலங்கையில் இடம்பெற்ற யுத்தத்தின்போது கற்றுக்கொண்ட பாடங்கள் தொடர்பில் நினைவுகூர்ந்துள்ளார்.

ஜெனிவாவில் செய்தியாளர்களிடம் கருத்து வெளியிட்டிருக்கும் யுனிசெப் அமைப்பின் பேச்சாளர் ஜேம்ஸ் எல்டர், 2007 - 2008 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் தான் இலங்கையில் இருந்தபோது பல்வேறு விடயங்களைக் கற்றுக்கொண்டதாகத் தெரிவித்துள்ளார்.

அதுமாத்திரமன்றி விசேட நிபுணர்கள் அடங்கிய குழுவால் இலங்கை தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டின் ஊடாக ஐக்கிய நாடுகள் சபையும் பல்வேறு பாடங்களைக் கற்றுக்கொண்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

உலகிலேயே சிறுவர்களுக்குப் பாதுகாப்பற்ற, மிகவும் ஆபத்தான பகுதியாக காஸா இருக்கின்றது.

ஒவ்வொரு நாளாகக் கடக்கும்போது இந்த உண்மை மீளவும் உறுதிப்படுத்தப்படுகின்றது.

சீராகஇயங்கிக்கொண்டிருந்தமிகப்பெரியவைத்தியசாலையின்மீது கடந்த 48 மணித்தியாலங்களில் இருமுறை தாக்குதல் நடத்தப்பட்டிருக்கின்றது.

அந்த வைத்தியசாலையில் ஏற்கனவே வேறு பகுதிகளிலும், வீடுகளிலும் நடத்தப்பட்ட தாக்குதல்களால் மிகமோசமாகக் காயமடைந்த பெரும் எண்ணிக்கையான சிறுவர்கள் மாத்திரமன்றி, பாதுகாப்பைக் கோருகின்ற நூற்றுக்கணக்கான பெண்களும், சிறுவர்களும் இருந்தனர். – என்று சுட்டிக்காட்டியுள்ள ஜேம்ஸ் எல்டர், இதனுடன் தொடர்புபட்ட வகையிலேயே இலங்கை விவகாரம் குறித்து பிரஸ்தாபித்துள்ளார்.

அத்தோடு காஸாவில் 'பாதுகாப்பு வலயங்களாகப்' பிரகடனப்படுத்தப்பட்டிருக்கும் எந்தவொரு பகுதியும் சிறுவர்களுக்குப் பாதுகாப்பானவை அல்ல எனவும் அவர் தெரிவித்துள்ளார். (05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 23.12.2023இல் வெளியிடப்பெற்றது.